உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஅ — திருவள்ளுவர் யாண்டு ககஅரு — மலர் ச
நந்தன—ஆடி
1952—ஜூலை

ஆங்காங்கே (15)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை

சொல் விளக்கம்.

"ஈ, தா, கொடுவெனக் கிளக்கும் மூன்றும் இரவின் கிளவி ஆகிடன் உடைய (தொல்—சொல். எச்சவியல்—48)

"ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே" (... 49)
"தா வென் கிளவி ஒப்போன் கூற்றே" (... 50)
"கொடு வென் கிளவி உயர்ந்தோன் கூற்றே" (... 51)

1. ஈகை :— ஈ என்பது இழிந்தோன் மேலோனைக் கேட்பதாகும். இவ்வாறு கேட்டுக் கொடுக்கப்பட்டது ஈகை.

'அவன் என்னிடம் ஈ என்று பல்லைக் காட்டினான். நான் கொஞ்சம் பணம் கொடுத்தேன்' என்கிறோம்.

2. தரவு :— 'வா' என்னுஞ் சொல்லிலிருந்து 'வரல்' 'வரவு' என்பன வந்தது போல், 'தா' என்னுஞ் சொல்லிலிருந்து 'தரல்' 'தரவு' என்பன வந்தன. ஒரே நிலையிலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் கொடுப்பது 'தரவு' இச்சொல் 'தரகு' என வழங்குகிறது.

3. கொடை :— இச்சொல்லிற்கு அடி வேர் 'கொள்' (தள், தடு, தடை, என்பனபோல் கொள்—கொடு கொடை என்பன வந்தன.)

ஒருவன் நிலையையறிந்து மற்றவன் கொள் எனக் கொடுப்பது கொடையாகும்.

எனவே, 'ஈகை' ஒருவன் கேட்டுக் கொடுப்பது, 'தரவு' இருவர் உடன்பாட்டில் கொடுப்பது, 'கொடை' கேட்காமலே கொடுப்பது.

4. மொய் :— ஒருவனுக்குத் திருமணத்தின் காரணமாகவோ, இழவின் காரணமாகவோ மிக்கச் செலவு ஏற்பட்ட காலத்தில் அங்கு மொய்த்திருக்கும் (மொய்=கூட்டம்) உற்றார் உறவினர் கொடுப்பது 'மொய்' ஆகும். முன் காலத்தில் இப்பணத்தை திருப்பி வாங்குவதில்லை.

5. பரிசு :— இச் சொல்லிற்கு 'பரி' பகுதி, (பரி = விரைவு இச் சொல்லை ஆங்காங்கே 11 ஆம் வெளியீட்டில் விளக்கினேன்)

அன்பையும், தகைமையையும் பொருத்துக் கொடுப்பது பரிசு. இக் கொடையை விரைவாகக் கொடுக்கவேண்டும். இக் காரணத்தால் 'பரிசு' என்னும் பெயர் பெற்றது. இக்கருத்தை புறநானூறு 399 ஆம் பாட்டில் தாமன் தோன்றக்கோன் ஐயூர் முடவனுருக்குப் பரிசு கொடுத்தது நன்கு விளக்கும்.

அன்பின் மேலீட்டில் மணப் பெண்ணிற்கு திருமணத்திற்கு முன் கொடுப்பது பரிசு. இதை பரிசம் போடல் என்னும் வழக்கம் விளக்கும்.

6. வரிசை :—(Order or முறை) பெண் தாய் வீட்டிலிருந்து மணவாளன் வீட்டிற்குப் போகும்பொழுதும், சில பெரு நாட்களிலும் கொடுப்பதுவும், அடிமைகள் ஆண்டைக்கு சில காலங்களில் கொடுப்பதுவும், கொற்ற அலுவலார் (Govt. Servants) மேலோர்களுக்குக் கொடுப்பதுவும் வரிசையாகும்.

7. கையுரை :—(Token gift) தலைவன் தன் காதலைக் காட்ட தன் காதலிக்குக் கொடுப்பது 'காதற் கையுறை'.

8. கையூட்டு :— (Bribery) தன் காரியம் முடிவதற்காகக் கொடுப்பது கையூட்டு. தன் காரியம் முடிவதற்காக ஒருவரை வலிந்தழைத்து சிற்றுண, ஆற்றுண (refreshment) உண்ணச் செய்வது வாயூட்டாகும். அவன் வாய்க்கு கொஞ்சம் போட்டேன்' என்று சொல்வது இக்கருத்தை விளக்கும். இவ்வாறு வாயூட்டுப் போட்டும் தன் காரியம் பெறுவிட்டால் வாய்கரிசி போட்டதாகச் சொல்லுகிறுர்கள். பணத்திற்கு வாய்கரிசி போடுவதால் போடுபவனுக்கு என்ன பயன்.

முன் காட்டிய சொற்களில் கொடுப்பது என்னும் கருத்து ஊடுருவியுள்ளது. எனினும் சிறந்த வேற்றுமைக் கருத்துக்கள் உள்ளன.

ஒரு சொல்லிற்குப் பல பொருள்கள்.

II. 1. மடி :— இச் சொல்லிற்கு முதற்பொருள் மடித்தல் (Fold) துணியை மடி, கடிதத்தை மடி என்னும் வாக்கியங்களில் இப்பொருள் விளக்கம்

2. மடி = பை. நம் வேட்டியின் ஒரு முனையை மடித்துச் சொருகுவதால் ஒரு பை யுண்டாகும். இதற்கு மடி என்று பெயர், இப் பையில் வெற்றிலை பாக்கு முதலிய வைத்துக் கொள்கிறோம். இக் காலத்தில் தோலால் செய்யப்பட்டு வரும் பணப்பையின் (Purse) தோலை மடித்துத் தைக்கா விட்டால் பையாகாது.

3. மடி = பால் பை. மேற்காட்டியபடி தோலின் மடிப் பால் உண்டாவது பாற் பை. இப் பையில் பாலிருப்பதால் பாற்பை என்கிறோம். வெற்றிலை பாக்கிருந்தால் வெற்றிலைப்

பை, பணமிருந்தால் பணப்பை. இம் மாதிரியாக பாற்பைக்குப் பால் மடி என்று பெயர்.

4. **மடி = சோம்பல்.** கால் கைகளை மடித்துக் கொண்டிருப்பவன் வேலை செய்ய மாட்டான். இம் மடிப்புகள் சோம்பலால் உண்டாவன. எனவே மடி = சோம்பல்.

5. **மடி = வறுமை.** சோம்பேறி (மரத்தில் ஏறுபவன் மரமேறி. சோம்பல் ஏறுபவன் சோம்பேறி) தன் வாழ்க்கைக்காவன செய்ய மாட்டான். எனவே, இவனை வறுமை தொடர்ந்தே நிற்கும். ஆகையால் மடி = வறுமை (Cause for effect figure of speech.)

6. Laziness to stagnation, stagnation to decoy and decoy to death are natural sequences. எனவே மடி = Decoy, மடிந்த விறகு = பட்டுப்போன விறகு.

7. மடி = சா. அவன் மடிந்தான்.

தமிழின்வளர்ச்சியா !

III. மடி என்னும் சொல்லின் பொருள்கள் மேற்கூறிய வாறாக நம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் கருத்தை இங்கு விளக்க வேண்டியிருக்கிறது. இக்கழகத்தார் தமிழ்க் கலைக் களஞ்சியம் (Tamil Encyclopedia) ஒன்று வெளியிட முயன்றனர். இந் நூலை விளம்பரஞ் செய்வதற்காக அந் நூலிலுள்ள சில பொருள்களைத் தொகுத்து வெளியிட்டனர். இதில் மாட்டின் மடியை மாட்டு மடுவெனக் குறித்திருந்தது. மடி வேறு, மடு வேறு, இவைகளில் வேற்றுமைகள் பல உள்ளன. இரண்டு வேற்றுமைகளை இங்கு குறித்கிறேன்.

1. பால் வற்றினால் பால்மடி சுருங்கும். நீர் வற்றினால் மடு சுருங்குமா !

2. பால் மடி மாட்டின் கொப்பூழிற்குப்பின் உள்ளது ஆற்றின் மடுவோ ஓர் காலத்தில் ஓரிடத்திலும், வேறு காலத்தில் வேறு இடத்திலும் இருக்கும். 'ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்' என்னும் வாக்கியம் இக்கருத்தை விளக்கும்.

மற்றும் இந்நூலில் ஒரு செகண்டை (seconds) ஒரு விநாடிக்கு ஒப்பாகக் குறிப்பிட்டிருந்தது.

ஒரு நாழிகை = *24* மினிட்டு (minitue)
60 விநாடி = ஒரு நாழிகை
எனவே *60* விநாடி = *24* மினிட்டு
அல்லது *60* விநாடி = *24* × *60* = *1440* சகண்டுகள் (seconds)
ஆகையால் *1* விநாடி = *24* சகண்டுகள். (seconds)

மேற்காட்டியவாறு சொற்களின் பொருள்களை நன்கு ஆராயாமல் மனம் போனபடி பெரு நூல்களில் எழுதுவது தமிழை வளர்பதாகாது, தமிழை அழிப்பதாகும்.

தமிழை வளர்க்கா விட்டாலும், அழிக்காமலிருக்க தமிழரை மிக்க வேண்டுகிறேன்.

தமிழனின் கால அளவு இதுவா

IV. (Time measusre.)

இமைப்பொழுது என்பது தமிழனின் நுண்ணிய கால அளவு ஆகையால், "இமைப்பொழுதும் என்னெஞ்சம் நீங்கா தான் தாள் வாழ்க" என்றனர் மாணிக்கவாசகர்.

காலத்தை கண்களே உணரக்கூடும். எனவே, கண்கள் இமைத்து காலத்தின் நுண்ணிய அளவைக்காட்டுவது மிக்கப் பொருத்தமானதே.

நிற்க, தொங்கலுள்ள நிலைக் கெடியாரத்தின் முன்னின்று அத்தொங்களின் ஆட்டத்தையும், கண் இமைத்தலையும் ஒத்துப் பார்த்தால் கண் இமையளவு ஒரு செகண்டிற்குச் (One second) சிறிய கால அளவு என்பது விளங்கும். நான் இமைத்துப் பார்த்ததில் 60 இமைப்புகள்—24 செகண்டுகள் அல்லது 1 விஞடி என அறிந்தேன்.

நானுேதிரைந்த கவுளும், திரிந்த தாடியும், நரைத்த முடியு முடைய முதியோன் என்னிலும் இளையோர் இவ்வுண்மையை ஆய்ந்தறியவும்.

60 இமைப்புகள் ஒரு விஞடியாயின், பின் வருவது தமிழனின் கால அளவாகும். (Time measure)

60 இமைப்பொழுது = ஒரு விஞடி
60 விஞடிகள் = ஒரு நாழிகை
60 நாழிகை அல்லது 6 சிறு பொழுது = ஒருநாள்
60 நாட்கள் = ஒரு பெரும் பொழுது
6 பெரும் பொழுதுகள் = ஒரு ஆண்டு
60 ஆண்டுகள் = ஒரு கால வட்டிகை (Time Cycle)

இதைப்புலவோர் ஆராய்க!

V. இது தமிழ்ச் சொல்லா அல்லது வடமொழிச் சொல்லா?

பாலன்:— காலன் என்னுஞ் சொல்லிற்கு கால் (காலம்) பகுதி, அன் ஆண்பால் விகுதி இதுபோல், பாலன் என்னுஞ்சொல்லிற்கு பால் பகுதி, அன் ஆண்பால் விகுதி. காலன் = காலத்திற்குறி யவன் பாலன் = பாலிற்குரியவன். (தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்குரிய பெயர்) எனவே பாலன் தமிழ்ச்சொல்லே. ஆனல் நம்மவர்கள் பாலன் என்பதின் முதல் எழுத்தை வல்லோசையுடன் உச்சரிக்காமல் மெல்லோசையுடன் உச்சரித்து வடமொழிச் சொல்லாக்குகிருர்கள். பாலன் என்பதை Palan எல உச்சரிக்க வேண்டும், Balan என உச்சரிப்பது பிழை.

தமிழ் வெல்க.

திருவெம்பாவை.

சித்தாந்த கலாநிதி, திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

(முற்றொடர்ச்சி, துணர் உஅ, மலர் ந, பக்கம் 96)

இறுதி யாகிய இருபதாம் பாட்டில் எல்லோரும் ஒன்று கூடி இறைவன் திருவருளை வியந்து, 'போற்றி யருளுக நின் ஆதியாம்பாதமலர் எனத் தொடங்கி, 'போற்றி யாம் மார்கழி நீ ராடேலோ ரெம்பாவாய்,' எனப் பாடித் திருக்கடைக், காப்புச் செய்கின்றனர்.

இத் திருவெம்பாவையின்கண் அடங்கியிருக்கும் கருத்து பண்டையோர் ஒருவரால் சத்தியை வியந்தது என்று குறிக்கப் பட்டுளது. இதற் கேற்ப மனோன்மணி, சருவபூததமனி பலப்பிரதமனி, பலவிகரணி, கலவிகரணி, காளி ரௌத்திரி சேட்டை வாமை என ஒன்பதின்மர் சத்திகள் என்றும், மனோன்மணி போந்து முதற் பாட்டில் சருவபூததமனியை எழுப்ப அவள் மற்றவளை எழுப்ப இவ்வாறு முதல் எட்டு பாட்டுக்களில் இச் சத்திகள் எழுப்பப் படுகின்றன ரென்றும் கூறுவர். மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள் பேதையரும் பெதும்பையருமாகிய ஐந்தாமாண்டு முதல் பனிரண்டாமாண்டு ஈறாகவுள்ள மண மாகாத மகளிர் துயிலுணர்த்தப் பெறுகின்றன ரென்றும், அவருள்ளும் பனிரண்டாமாண்டு மகளிர் முதற்கண் எழுந்து முதலில் தம்மை யொத்த மகளிரையும் பின்னர் முறையே தம்மின் இளையோரையும் எட்டுப் பாட்டுக்களில் எழுப்புகின்றா ரென்றும் கொள்ளுதற்கு இட முண்டு என உரைப்பர்.

இனி உறங்கி எழுந்து வருவோரை ஆண்டவன் உண்மையும் அவனது அருள் நலமும் உரைப்பார் உரைக்கக் கேட்டு உணர்ந்து வரும் நன் மக்களாகவும், நீர்த்துறையை இறைவன் அருள் நிலையமாகவும், அதன்கண் படிந்தாடிப் பரவுவது திருவருளில் தோய்ந்து இன்புறுவதாகவும் கூறுவர். அந் நிலையில் இறைவனுடைய பெரு நலங்களும் 'அடியார் பெருமையும் அவர்க்கு மக்கள் அடிமைப் பணி புரியும் கடமையும் குறிக்கப்படுகின்றன. தாயர் போலும் சான்றோர்' 'இறைவன் பாதமலர் சொற் கழிவு; திருமுடி, எல்லாப் பொருட்கும் முடிவு, பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்; வேத முதல்; ஒரு தோழன் தொண்டருளன், அவனுக்கு ஊர், பேர், ஏது? உற்றூர் அயலார் யார்? அவனைப் பாடும் பரிசு ஏது? எய்யாமற் காப்பாய் என வேண்டுவதே செய்தற்குரியது' என்று அறிவுறுத்துகின்றனர். அவர் வழி நிற்கும் உலகவர், இறைவன் திருக் கூத்தின் சிறப்பும் அவன் புரியும் ஐவகைத் தொழிலின் அமைதியும் அறிந்து இன்புறுவதும், காணப்படும் இவ் வுலகு ஆணும் பெண்ணுமாகிய உருவில் அம் முதல்வனைக் காட்டக் கண்டு மகிழ்வதும் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த இறைவியின் திருவருளை வியந்து உவப்பதும், இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்றவர் மறந்தும் புறந் தொழாத மாண்பு கொண்டுயர்வதும் மகளிர் நீராடும் பாட்டுக்களின் குறிப்பு என்பர் திருப்பாதிரிப்புலியூர், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். தாயரும் மகளிரும் கூடி மழையை வாழ்த்து முகத்தால் திருவருள் அறிவு பெற்றோர்க்கு அத் திருவருள் முதல்வன் அவரவர் உள்ளத்திலும் எழுந்தருளி இன்பந் தருவன் என்றும் (17) ஞாயிற்றின் நல்லொளி யெழக் கண்டு தாயர் நீர் முழுகுவது போல் இறைவனது அருளொளி தோன்றக் கண்டு நல்லறிஞர் அதன் இன்பத்தில் மூழ்குவர் என்றும் (18) குறிக்கப் படுகின்றன. மகளிர் 'உன் கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' எனத் தம்மைக் கை யடைப் படுப்பது போல, உலகவர்

தம்மை இறைவன் அருட்கு உரிமை செய்தல் பத்தொன்பதாம்
பாட்டின் குறிப்பு என்பர். இறுதிப் பாட்டில் இறைவன்
திருவடியே எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமு மாவன என
முன் மொழிந்து பின்பு படைத்தல், காத்தல், அழித்தல்,
மறைத்தல், அருளல் என்ற ஐவகைத் தொழில்களையும்
செய்வன அவன் திருவருளே என வற்புறுத்தி அதனை
நினைந்து வாழ்வதே உயிர்கட்குக் கடன் என்பது பெற
வைப்பர் மதுரைச் சிவப்பிரகாசர்.

சூடிக்கொடுத்த நாச்சியார் எனப்படும் ஆண்டாள்
அருளிய திருப்பாவைக்கு உரைகண்ட சான்றோர்கள், வேறு
வகையாக முன்னுரை வழங்குகின்றார்கள். 'கண்ணபிரான்
தூர்த்தனாயிராநின்றான். இவன் முகத்திலே பெண்கள் விழிக்க
லாகாது என்று பார்த்து இவர்களை (கோவியர் பெண்களை)க்
கொண்டு போய் நிலவறைகளிலே யடைக்கப் பெண்களும்,
கிருஷ்ணனும் பண்ணின பாக்கியத்தாலே வர்ஷ மின்றிக்கே
யொழியப் பெண்கள் இருந்து மநோரதிக்கிறார்கள். கோதனரா
யிருக்கிற இடையர் வர்ஷார்த்தமாக நம்மைநோற்கச் சொல்
லக் கடவர்கள். கிருஷ்ணன் இதுக்குக் கடைக் கூட்டனாகவும்
கடவன். நமக்கொரு துக்கமில்லை என்று பெண்கள் பிரீதை
களாய்த் தரித்திருக்கிற தசையிலே வர்ஷ மின்றிக்கே
இருக்கிற படியைக் கண்டு கோப விருத்தரெல்லாரும் திரண்டு
பசுக்களும் மனுஷ்யரும் பிழைக்கும் விரகு ஏதோ என்று
பார்த்து வர்ஷார்த்தமாக நோற்க வர்ஷ முண்டாம் என்று
இவ்வூரில் பெண்கள் அடைய நோற்கக் கடவர்கள்; இந்
நோன்புக்கு இங்குத் தைக்கு அதிபனான ஸ்ரீநந்தகோபர் மகன்
கிருஷ்ணன் கடகனாவான் என்று அத்ய வசித்துப் பெண்பிள்ளை
யடைய அழைத்துக் கிருஷ்ணனையும் அழைத்துப் பெண்களை
நோற்கச் சொல்லி இவர்கள் நோன்புக்கு நீ கடகனாக வேணும்
என்று கிருஷ்ணனை அபேக்ஷிக்க அவன் எனக்கு க்ஷமமன்று
என்ன, இத்தனையும் செய்ய வேணுமென்று மறுக்க
வொண்ணாதபடி நிர்பந்திக்க, அவனும் இசைந்து பின்பு,
எல்லோரும் திரள இருந்து, பெண்கள் நோற்பர் இதுக்கு
வேண்டுவது கிருஷ்ணன் சககரித்துக் கொடுப்பான் என்று
கிருஷ்ணன் கையிலே பெண்களைக் காட்டிக் கொடுத்துக் கோப
விருத்தரெல்லாரும் போன பின்பு, பெண்களும் கிருஷ்ணனும்

கூட விருந்து திருக் குரவை கோத்த ராத்திரி போல பெண்காள் இதுவும் நமக்கு ஒரு ராத்திரியே என்று கிருஷ்ணன் கொண்டாடி இனி அசிர்ப்புப் பிறக்க வைகல் இருப்போமல்லோம் இப்போது எல்லோரும் போய் அபர ராத்திரியிலே வந்து எழுப்புங் கோள் நோன்புக்கு குளிக்கலாம் படி என்று அருளிச் செய்து கிருஷ்ணனும் பெண்களைப் பிரிந்து போய்த் தரிக்க மாட்டாமே நப்பின்னைப் பிராட்டி திரு மாளிகையிலே புக்கான்.

பெண்களும் பரஸ்பரம் சம்ஸ்லேஷத்தாலே கால்நடை தந்து போய்த் தந்தம் மாளிகையிலே புக்கு உறங்கப் புக்க விடத்தில் கண்ணுறங்காமையாலே முற்பட வுணர்ந்தவர்கள் கிருஷ்ண குண சேஷ்டிதங்களை நினைத்து எழுந்திருக்க மாட்டாதே கிடக்கிறவர்களை உணர்த்தத் தனித்தனியே சென்று எழுப்பி எல்லாரும் கூடி உத்தேசியமான ஸ்ரீ நந்த கோபர் திரு மாளிகையிலே சென்று கிருஷ்ணனை யெழுப்பித் தங்கள் அபேக்ஷிதத்தை அறிவித்து அபேக்ஷிதம் பெற்று முடிக்கிறது. உத்தேசியம் வேறொன்றாய் நோன்பு வியாஜ மாத்ர மாகில் இவர்கட்குத் தேவதை வர்ஷிக்குமோ வென்னில் விரதோபவாச கர்சிதமான வடிவைக் கண்டால், சேதன மன்றோ, வர்ஷியாதோ என்று பார்த்தார்கள் '—என்பது திருப்பாவை அவதாரிகை.

இனி, மகளிர் பிற மகளிரைத் துயிலெழுப்புங்கால், ஒருத்தியை நோக்கி, 'எப்போது இப் போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ நேரிழையாய் என்று கேட்க, அவள் அவர்களை நோக்கி, 'சீசீ இவையும் சிலவோ? விளையாடி ஏசும் இடம் ஈதோ' என்று கூறுபவள் 'நேரிழையீர்' என்று குறிக்கின்றாள். வைகறைப் போதில் நீர்த்துறைக்கு நீராடச் செல்லுதலால், நீக்கத்தக்க இழைகளை நீக்குவதாகிய குறிப்புத் தோன்ற 'நேரிழையாய்' என்றும் 'நேரிழையீர்' என்றும் ஒருவரை யொருவர் குறிப்பு மொழியால் உரைப்பதைத் திருவெம்பாவையிற் காண்கின்றோம்; அது போலவே திருப்பாவையில் 'நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்' என்றொரு குறிப்புக் காணப்படுகிறது. அதற்கு விளக்கங் கூறிய உரைகாரர்கள் 'நேரிழையீர்' என்றதற்கு 'ஆபரணத்தை யுடையீர்' என்று பொருள் கூறி 'இவர்கள்

போதுமினே என்ற பின்பு அவர்கள் வடிவிலே பிறந்த புதுக் கணிப்பு இருந்தபடி, அன்றிக்கே 'கொங்கை மேற் குங்குமத்தின் குழம்பழிய' என்கிற படியே கிருஷ்ணனுடைய வரவைக் கடாக்ஷித்து அவன் எப்போது வந்து மேல் விழும் என்று அறியாத படியாலே தங்களை எப்போதும் அலங்கரித்த படியே இருப்பார்கள் என்றுமாம்; வஸதி ஹ்ருதி ஸௌமிய ரூப: என்னுமா போலே முன் புத்தை கிருஷ்ணனோட்டைக் கலவியால் பிறந்த புகர் இப்போது தோற்றும்படி இருக்கையாலே சொல்லவுமாம்' என்று கூறினர். இவ் விளக்கத்துக்கு அமைதி கூற வந்த சான்றோர் ஒருவர், 'விலக்ஷண மான விஷயத்தை க்ஷண காலம் விஸ்லேஷிக்கும் போதும் விஸ்லேஷ விசனம் பெரிதாயிருக்த இப்போது ஆபரணமும் பூண்டிருப்பரோ; நேரிழையீர் என்று சம்போதிக்கும்படி என்னென்ன இதற்கு மூன்று பரிகாரம் அருளிச் செய்கின்றார்' என வுரைகின்றார்.

மழை பெய்தல் வேண்டும் என வழிபடும் பகுதி யொன்று திருவெம்பாவை, திருப்பாவை இரண்டினும் உளது. மழையே நீ உமையம்மையின் மேனி போலக் கருத்து, அவளது சிற்றிடை போல மின்னிப் பொலிந்து, அவளது திருவடிப் பொற் சிலம்பு போல முழங்கி, திருப் புருவம் போல வில்லிட்டு, அவள் சுரக்கும் இன்னருள் போல மழையைப் பொழிதல் வேண்டும் எனத் திருவெம்பாவை கூறுகிறது. மழையே ஊழி முதல்வன் உருவம் போல மெய் கருத்து, அவனது ஆழி போல மின்னி வலம்புரி போல நின்றதிர்ந்து, சாரங்கம் உதைத்த சரமழை போல் பெய்திடாய்' என்று திருப்பாவை கூறுகிறது. அவ்விடத்தே 'வருஷ தேவதையான பர்ஜன்யன் நாம் இச் சேர்த்தியிலே கிஞ்சித் கரித்து ஸ்வரூபம் பெற வேணுமென்று வந்து நான் இங்குத் தைக்குச் செய்ய வேண்டும் அடிமையை நியமிக்க வேணும் என்ன, செய்யக் கடவ படியை இன்ன படியும் இன்ன படியும் என்று கையோலை செய்து கொடுக்கிறார்கள்.' என்று இப் பாசுரத்துக்கு முன்னுரை காட்டி, 'வர்ஷ தேவதை அடியேனுக்கு ஒரு கிஞ்சித்காரம் நியமித் தருள வேணும் என்று பிரார்த்திக்க இவர்கள் அவனுக்குக் கைங்கர்யம் நியமித்த படியைச் சொல்லுகிறது என்று ஸ்வாபதேச வியாக்கியானத்தில் முன்னுரை சொலித் தாற்பரியம் கூறுமிடத்து, 'இப் பாட்டில் வர்ஷ தேவதைக்கு அவன் அதிகரித்த கார்யத்

தையே தங்களுக்கு இஷ்டமாக நியமிக்கையாலே பகவத் பாகவத இஷ்டத் வேக நித்திய நைமித்தி காதி தர்மங்களை யதாவாக அனுஷ்டிக்கை பிரபக் நாதிகாரிகளுக்கு ஆவசியக மென்ற தாய்த்து' என்று பெரியோர்கள் கருதிக் கூறு கின்றார்கள்.

இத் துணையும் கூறியதனுல் திருவெம்பாவை சிவபெருமா னது திருவருட் சத்தியை வியந்து பாராட்டும் கருத்துடைய தென்றும், திருப் பாவை கோபிகைகள் கண்ணனது கூட்டத்தை விரும்பிய வேட்கை மிகுதி பற்றி ஆயர் பாடியில் நிகழ்ந்த நிகழ்ச்சியை நிகழ்த்தும் நீர்மைய தென்றும் இரு வேறு கருத்துக்கள் கால வரலாற்றில் கொள்ளப்பட்டிருக் கின்றன என்பது விளங்கும்.

இங்கே விரியக் கண்ட பாவைப் பாட்டு இரண்டும் தோன்றியது ஆயிரத்து இருநூறு யாண்டுகட்கு முன்பாயி னும், அவை இன்றும் புதுமைப் பண்பும் சுவை மிகுதியும் பெருகக் கொண்டிருப்பது கண் கூடு. இடைக் காலத்தே விசயலாயன் வழிவந்த சோழ வேந்தர்களும் பாண்டி மன்னர் களும் பிறரும் திருவெம்பாவையின் சிறப்பை நன்கு உணர்ந்து, மார்கழியில் நடைபெறும் விழாக்களில் திருவெம்பாவையைக் கோயில்களில் ஓதுதற்கென நிவந்தங்கள் பல அளித்துள்ள னர். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் கங்கை கொண்ட சோழன் மக்களில் ஒருவனான இரண்டாம் இராசேந்திரன் ஆட்சியில் ஐந்தா மாண்டில் நடு நாட்டுத் திருக்கோவலூரில் திருவெம்பாவை யோதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அந்த இராசேந்திரன் தம்பி முதல் வீரராசேந் திரன் காலத்தில் இத்தகைய ஏற்பாடொன்று உண்டாயிற்று. A. R. for 1926—7 Para 26) சோழ நாட்டில் எண் வகை வீரட்டங்களுள் ஒன்றான வழுவூரில் வீரட்டேசுரர் கோயிலில் கி. பி. 12-ம் நூற்றாண்டில், இரண்டாம் இராதிராசன் காலத் தில் திருவெம்பாவை ஓதுதற்கான நிவந்தம் விடப்பட்டதென அவ்வூர்க் கல்வெட்டு (A. R. No. 421 of 1912) கூறுகிறது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் மாறவன்மன் சுந்தர பாண்டியன் ஆட்சி புரிந்தபோது தென்பாண்டி நாட்டு நாங்குநேரியி லுள்ள சிவன் கோயிலில் அவனி நாராயணப் பல்லவரையர் என்னும் தலைவர் ஒருவரால் திருவெம்பாவையை ஓதுவதற்

கென்று நிவந்தம் ஏற்படுத்திய செய்தியை அவ்வூர்க் கல்வெட்டு (A. R. for 1927—8 Para 19) கூறுகிறது. கி. பி. 14-ம் நூற்றூண்டில் நம் தமிழ்நாட்டை யாண்ட விசய நகர வேந்தருள் ஒருவரான அரியரதேவராயர் காலத்தில் சென்னையின் வடபகுதியான திருவெற்றியூர்க் கோயில் செயல் முறைகளை ஆராய்ந்து செம்மை செய்யும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதனல் பழைய வழக்குகள் சில புதுப்பிக்கப் பட்டன. அவற்றுள் திருவெம்பாவை ஓதுவதும் ஒன்ருகக் கல்வெட்டறிக்கை கூறுகிறது. (A. R. for 1913 Para 51).

இவ்வாறு தமிழக மெங்கும் சீரிய நிலைமையில் வைத்துச் சிறப்பிக்கப் பெற்ற திருவெம்பாவை கீழைக் கடலை கடந்து சயாம் நாட்டுக்கும் சென்றிருக்கிறது. திருப்பாவையும் உடன் சென்றது. சயாம் நாட்டு மன்னர்கள் இரண்டையும் சிறப்பாக வரவேற்றனர். அவர்களது முடிசூட்டு விழாவில் ஓதப்பெறும் தமிழ் மந்திரம் இத் திருவெம்பாவை; இதற்கு அவர்கள் "லோரி பாவாய்" என்று பெயரிட்டுள்ளனர். மார்கழித் திங்களில் அவர்கள் பெரிய விழாச் செய்கின்றனர். அவ் விழாவில் முதல் பதினைந்து நாள் திருவெம்பாவை விழா என்றும், பின் ஐந்து நாள் திருப்பாவை விழா என்றும், இவை யிரண்டையும் தங்கள் சயாம் மொழியில் "லோ-ஜின்-ஜா" என்றும் குறிக்கின்றனர். இவ் விழாக்களைப்பற்றிய விரிந்த குறிப்பை H. G. குவாரிஎசு வேல்சு H. G. Quritch Wales — The Lord Chamberlains Department of the Court of Siam) என்பார் எழுதிய சயாம் நாட்டு அரச வாழ்க்கை என்ற ஆங்கில நூலில் விரியக் காணலாம் 1918-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் வெளி வந்த வெளியீடொன்ருல் இந்தோனீசியாவிலும், பிற பகுதிகளிலும் திருவெம்பாவை தமிழ் மந்திரமாக நிலவிய செய்தியை அவரே வெளியிட்டுள்ளார்.

கி. பி. பதினைந்தாம் நூற்றூண்டிலும் அதற்குப் பின்னும் தோன்றிய காலம் தமிழர் வாழ்வுக்குப் பெருங்கேடு விளைந்த காலமாகும். தமிழ் மொழி பிற மொழிகட்கு முதலிடம் தந்து சீரழிந்தது. அரசியலில் செல்வாக்கிழந்ததே யன்றி, திருக்கோயில் வழிபாடுகளிலும் செந்தமிழ் தன் சீரிய இடத்தைக் கைவிட்டது. திருமுறைகளும், திருவெம்பாவை

யும் தாம் பெற்றிருந்த சிறப்பை இழந்தன. அவற்றை நிலை பெறுவித்த நிவந்தங்கள் 'கோயிற் பூனைகட்கும்' 'கோயிற் பெருச்சாளி' கட்கும் இரையாயின. தமிழ் மக்கள் உள்ளத்தை உருக்கி திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவருளில் இனிய எளிய முறையில் ஈடுபடச் செய்த திருமுறையும். திருவாசகமும் அங்கே ஓதுவாரையும், ஓதக் கேட்போரையும் இழந்தன. அவற்றின் பொருளை உணர்வாரும் உணர்த்தக் கேட்பாரும் இலராயினர். ஓதுவதும் உணர்வதும் தமக்கு இழிவென எண்ணும் தமிழ்ச் செல்வர்களும் தலைவர்களும் உளராயினர் எனின் வேறு கூறுவானேன் ?

சென்ற சில ஆண்டுகட்கு முன் திருக்கோயில்களில், திருமுறை திருவாசகப் பாட்டுக்களைக் கோயிற் சுவர்களில் அழகுற எழுதிவைக்கும் முறையொன்று உண்டாயிற்று. கோயிலுக்குச் செல்வோர் கண்களை அவைகள் கவர்ந்தன. அவர் வாயில் அப் பாட்டுக்கள் தோன்றின. அவர் தம் உள்ளத்தில் ஒரு வகை ஒளி பிறந்தது. பின்னர் அவ் வெழுத்துக்களின் தோற்றம் மறையலுற்றது. புதுக்குவோர் அருகினர். புதுக்கக் கருதுவோர் இலராயினர்.

இன்று திருவெம்பாவை விழாக்களும், திருவாசக விழாக் களும் எழுகின்றன. மறைந்த ஒளி விளங்க முயல்கிறது. வீழ்ந்த திருமுறை எழத் தலைப்படுகிறது. மடிந்து கிடந்த தமிழகம் எழுந்து நிற்க முயலுகிறது. ஒடிந்து வீழ்ந்து உணர்விழந்து கிடந்த தமிழன் புரண்டு எழுந்து கண்ணைப் பிசைந்து கொண்டு எழுந்திருக்க முயல்கின்றான்.

எழுக திருவெம்பாவை !
எழுக திருவாசகம் !
எழுக திருமுறை !

வாழ்க தமிழ்! வாழியர் தமிழர்! வாழி தமிழகம்!

கழற்சிங்கன்.

புலவர், நா. நல்லொளியன்.

நாட்டில் மாணவர்கள் எல்லோரும் வரலாற்று நூல்களை முறையாகக் கற்று வருகின்றனர். அவற்றுள் 'பல்லவர் வரலாறும்' 'தமிழ் வரலாறும்' தமிழ் மாணவர்கட்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. பலர் இலக்கிய வரலாற்று முறையில் சுந்தரர் காலமும் கழற் சிங்க நாயனார் காலமும் பற்றிய செய்திகளை ஒருவருக்கொருவர் மாறுபட்ட நிலையில் வரைந்துள்ளனர். அவற்றுள் பல்லவ மன்னருள் கழற்சிங்கன் யார் என்பதைப் பற்றி மூன்று விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றுள் எது உண்மை என்பதை உணராது மாணவர் மயங்குகின்றனர். அம் மயக்கந் தீர ஓர் முடிவைக் காட்டுவதே இக் கட்டுரை.

மூவர் கருத்தாவன,

1. தந்திவர்மப் பல்லவனே கழற்சிங்கன் என்பர். திரு. K. சீனிவாச பிள்ளை அவர்கள் (கி. கி. 775 முதல் 825 வரை)

2. நந்தி வர்மப் பல்லவன் III. என்பர். திரு. மா. இராச மாணிக்கம் பிள்ளை அவர்கள் (கி. பி. 825 முதல் 850 வரை)

3. இராசசிம்மன் அல்லது நரசிம்மப் பல்லவன் II என்பர். திரு. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் (கி. பி. 690 முதல் 710 வரை)

இக் கருத்துக்களை நோக்குழி ஒருவர் சென்ற வழி ஒருவர் செல்லாமையும் சுமார் நூற்றாண்டு ஏற்றத் தாழ்வும் பெரு மலைப் பூட்டுவனவாய் அமைந்திருக்கின்றன.
ஆயினும் முதற் கருத்தை ஆராய்வோம்.

தந்திவர்மன் கழற் சிங்கனா?

தந்தி வர்மன் கி. பி. 775 முதல் 825 வரை ஆண்டவனாவான். இவனுக்கு 'வைரமேகன்' என்ற பெயருண்டு. 'இவன் செந்தாமரைக் கண்ணனான திருமாலின் அவதார மானவன்' என்று பட்டயங்கள் கூறுகின்றன. ஆதலால், இவன் வைணவன் என்பது நன்கு புலனாகின்றது. ஆயினும் சைவ வைணவ சமயப் பொறை யுடையவன்.

இவன் காலத்தில் இராட்டிர கூட மன்னன் மூன்ரும் கோவிந்தன் கி. பி. 803 லும், 'பெரும் படையுடன் (கி. பி. 808, 810 லும்) போரிட்டு (தந்தி வர்மனை) வென்று காஞ்சியைக் கைப்பற்றினன். தென்னட்டு அரசர் அனைவரையும் வென்ருன்; சோழ பாண்டிய நாடுகளை இராட்டிர கூட வீரர் அளந்து திரிந்தனர்'[1] என்று கூறுவதால் தந்திவர்மன் தன் நாட்டையும் தலைநகரையும் படை யெடுப்பினின்றும் காக்கவேண்டி யேற்பட்டது. ஆதலால் மூன்ரும் கோவிந்தனுடன் அவனுக்கு அடங்கியிருக்க விரும்பித் தான் ஒப்பந்தம் செய்து கொண்டான் என்று கருதவேண்டி யிருக்கிறது. இவன் ஆட்சி யாண்டை நோக்க இது வலியுறுகிறது.

அஃதன்றியும், இவன் காலத்துப் பாண்டியனுகிய முதல் வரகுண பாண்டியன (கி. பி. 800—830) பாண்டிய நாட்டை யாண்டான். அவன் தகடூர் அதியனை கி. பி. 806-ல் எதிர்த்த போழ்து, சேரனும், தந்திவர்மனும் அதிகனுக் குதவினர். பாண்டியன் அவர்களை யெல்லாம் வென்ருன். பின்னும் படை பெருக்கி கி. பி. 816-ல் பல்லவனேடு பொருது பெண்ணையாறு வரைக் கைப்பற்றினன். இஃதரைசூர் போர்ப் பாசறையிலிருந்து அம்பா சமுத்திரப் பட்டய மளித்துள்ளதால் அறிகின்ருேம். ஆதலால், தன் நாட்டின் பெரும் பகுதியைப் பாண்டியன் கவர்ந்து கொள்ளவும் தான் கோவிந்தனுக்கு அடங்கியும் நடக்கும் நிலையில் தந்திவர்ம னிருந்துள்ளான் என்பதும் தெற்றெென விளங்கும்.

தம்பிரான் தோழ ராகிய சுந்தரமூர்த்தி நாயனர் தாம் பாடிய திருத் தொண்டத் தொகையுள் 'கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற் சிங்கன்,' என்று கூறியுள்ளார். திருத் தொண்டத் தொகை சைவ சமயத்தைப் பரப்பிய ஒழுக்கமுடைய சிறந்த நாயன்மார்களைக் கூறும் பதிக மாகும். வைணவனுகிய தந்தி வர்மனைச் சுந்தரர் சிவனடியார் என்று கூறினு ரென்ருல் யாவருக்கும் நகை விளைப்ப தொன்ரும். நாடிழந்து சில பகுதியைச் சிற்றரசு போல் பன்னுள் ஆண்டு வாழ்ந்த பல்லவ மன்னனை 'கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற' வேந்தர் என்று சுந்தரர் கூறியிருக்க மாட்டார். பேரரசரை யன்றி சிற்றரசரை யவர் கூறுவதில்லை. இது மதுரைக்குச் சேரமானுடன் சென்று ஆண்டிருந்த சோழனும் பாண்டியருஞ் சூழ திருப்பரங்குன்றம் இறைவனை வணங்கி யியற்றிய பதிகத்தில் 'மூவேந்தர்' எனக் குறித்தா ரன்றி

1. The Reshtrakutas & their times, P. P. 68—69.

பல்லவர்க்கு அடை கொடுத்துக் கூறியது போல தான் பெரிதும் வாழ்ந்த சோழ நாட்டின் மன்னரைச் சிறிதும் குறிப்பிடவில்லை. ஆதலால், மணஞ் செய்து கொண்டு மதுரையில் வாழ்ந்து வந்திருந்தமை கருதியே பாடவில்லை என்பது நனி விளங்கும். எனவே சுந்தரரால் சிறப்பித்துக் கூறப்பட்ட பல்லவன் பேர ரசனுவன் என்பது தேற்றம். இவற்ருல் தந்தி வர்மன் அன்று என்பதும் பிறிதொரு மன்னன் என்பதும் பெற்ரும். இனி மற்ருெரு கருத்தினையுங் காண்பாம்.

மூன்ரும் நந்தி வர்மன் கழற்சிங்க ஞவனு ?

இவன் தந்தி வர்மன் மகன். தெள்ளா றெறிந்த நந்தி வர்மன் எனப்படுவான். கி. பி. 825—850 வரை யாண்டவன். 'அவனி நாராயணன்' என்ற பெயரும் உண்டு. இவன் காலத்தில் 'காவேரிப் பாக்கம்' என்னு மூர் 'அவனி நாராயண சதுர் வேதி மங்கலம்' என்று பெயர் பெற்றிருந்தது. இவன் காலத்துச் சையம் சென்ற ஒரு வணிகன் ஆண்டோர் குளந் தொட்டு அதற்கு 'அவனி நாரணன்' என்று பெயரிட்டதை அங்குள்ள கல்வெட்டுக் கூறுகின்றது. இவன் வைணவத் தந்தையுடன் வாழ்ந்த போழ்து 'அவனி நாராயணன்' என்ற பெயர் பெற் றிருந்திருக்க வேண்டும் என்றும் முடி சூடிய போழ்து நந்தி வர்மன் என அபிடேகப் பெயர் பெற்றிருக்கலாம் என்றும் எண்ண வேண்டி யிருக்கிறது.* இவன் சைவப் பற்று மிக் குடையவன். ஆயினும், சமயப் பொறை யுடையவன். தன் தந்தை இழந்த நாடுகளை மீட்டும் பெற விரும்பி இராட்டிர கூடருடனும், பாண்டியருடனும் போர் புரிந்து வெற்றி யெய்திப் பேரரசன் என்பதை நிலை நாட்டினுன். இவ னுட்சி சோழ நாட்டுக் காவிரிக் கரை வரை பரவி யிருந்தது. இவன் பல சிவன் கோயிற்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்; திரு வல்லம் கோவிலுக்கு மூன்று சிற்றூர்களைத் தானமாக அளித்து அங்குத் திருப்பதிகம் ஓதுவார் உள்ளிட்ட பல பணி செய்வார்க்கு 2000 காடி நெல்லும் 20 கழஞ்சு பொன்னும் தருமாறு செய்தனன்.* இதனுல் இவன் காலத்தில் கோவிலில் மூவர் தேவாரம் எனப் படும் திருப்பதிகம் பாடப்பட்டு வந்ததாதல் வேண்டும். தமக்கு முன் னிருந்தாரின் அருஞ் செயல்களையும் பாடல்களையும் அறிந்து பிறகு தான் உயர்ந்ததாகக் கருதுவதை மக்கள் போற்றுதல் செய்வர். தன் காலத்தவரின் ஒழுக்கமும், அருஞ் செயல்களையும் காண முடியு மேனும் அவரைச் சிறந்த சிவ னடியவராகவும் அருளாள ராகவும் ஏற்றுக் கொண்டு இறைவ னுக்கு நிகராகக் கருதி அவர் பாக்களைக் கோவிலில் பாடச் செய்வரா என்பதனைச் சிறிது சிந்திக்கவேண்டி யிருக்கின்றது.

கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி யருளிய திருத் தொண்டர் திருவந்தாதியில்,

'மாதவத் தோர் தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்கு வைத்த
போதினைத் தான் மோந்த தேவிதன் மூக்கை அரியப் பொற்கை
காதி வைத் தன்றே அரிவதென் றுங்கவள் கைதடிந்தான்
நாத மொய்த் தார் வண்டு கிண்டுபைங் கோதை கழற் சிங்கனே'

(திருவந்தாதி—சுச)

கழற் சிங்க நாயனுரையும்,

'கழிநீள் கடல்நஞ் சயின்றூர்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன் தேவிமுன் மோத்தலுமே
——— ——— ———
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தான்என் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னுட்டமர் தஞ்சைச் செருத்துணையே.'

(திருவந்தாதி—சுசு)

எனச் செருத்துணை நாயனுரைப் பற்றிய பாடலிலும் கூறியுள்ளார். இதனுல் கழற்சிங்கன் என்னும் பல்லவன் திருவாரூர் சென்று வழிபாடு செய்தா னென்பதும் அப்பொழுது ஆரூர் விடங்கனுக்கு அணிவிக்கும் மலரி லொன்றை அவன் தேவி எடுத்து முகந்தாள் என்பதும் அது காரணமாகச் செருத்துணை என்பவர் மாதேவியின் மூக்கரிந்தார் என்பதும் அஃதறிந்த கழற்சிங்கன் முகர்தற்குமுன் மலரை எடுத்த முதற் குற்றம் செய்தது கையல்லவா என்று தன் மனைவியின் கையைத் தடிந்தான் என்று பெரியபுராணமும் மேற் காட்டிய பாடல்களும் நன்கு விளக்கிக் கூறுகின்றன. இத்தகைய செயல் செய்ய நந்தி வர்மனுக்கு வாய்ப் பிருந்ததா? என்பதனையும் கவனிப்பாம். இவ னுட்சியில் பத்தாம் ஆண்டுவரை போரில் ஈடுபட்டிருந்தான். இதனுல் நாட்டில் பத்தாண்டின் பின்னர் பெரும் வற்கடம் ஏற்பட்டது, அதைத் தீர்க்க வேண்டிய நிலையில் அரசன் பல

---

* இதுபோல் பாண்டியருள் சங்க காலத்து வெற்றிவேற் செழியன் என்பவன் நன்மாறன் எனவும் சோழருள் அருண் மொழி வர்மன் இராசராசன் I எனவும் பல்லவருள் நரசிம்மவர்மன் II என்பவன் இராசசிம்மன் I எனவும், அபிடேகப் பெயர் பெற்றிருத்தலைக் காண்க.

* S. I. I. Vol. III. P. 93.

ஆண்டுகள் உழைத்திருத்தல் வேண்டும் என்று அவனது வரலாறு விளம்புகிறது. ஆதலால் இவன் தல யாத்திரை செய்ய நல்ல வாய்ப்பில்லை. அன்றியும் நந்திவர்மன் III க்கு இரு மனைவிய ரிருந்தனர். ஒருவன் பாண்டியன் சீமாறன் சீவல்லபன் மகள் அடிகள் கந்தன் மாறம் பாவையார் என்பவளாவாள். இவள் 75 ஆண்டுகள் உயிருடனிருந்து பல சிவப் பணிகள் செய்துள்ள பெரும் சிவ பக்தி பூண்டவளாவள்.[2] மற்றொருவள் நந்தி வர்மனிடம் தோல்வி யுற்ற இராட்டிர கூட மன்னன் அமோக வர்ஷ நிருபதுங்கன் மகளாகிய சங்கா என்பவளாவள். 'இவள் இலக்குமியின் அவதாரம் என்னலாம்; ஈன்ற தாயைப் போலக் குடிகளைப் பாதுகாத்தாள். அரசனது நற்பேறே இவளாகப் பிறப் பெடுத்து வந்தது போலும்! இவள் சிறந்த நுட்ப அறிவுடையவள்: எல்லாக் கலைகளிலும் வல்லவள். என்று பாகூர்ப் பட்டயம் பகர்கின்றது,[3] நுண்ணறிவு படைத்த சங்கா தேவி கணவனின் மனநிலை அறியாதவளா யிருக்க முடியாது. இவள் எத்துணை யாண்டு வாழ்ந்தா ளென்பது நன்கு தெரியவில்லை. முன்னவளே பல ஆண்டு வாழ்ந்தவளாதலால் அவள் கரமும் மூக்கும் வெட்டப்பட்டிருப்பின் அது அவள் பின் செய்த அறச் செயல் குறிக்கும் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் வரையப் பட்டிருந்திருக்கும். அங்ஙனம் காணப் படாமையின், இவன் காலத்துத் திருவாரூர் நிகழ்ச்சி நடை பெற வில்லை என்பதுறுதி.

மேலும் சுந்தரர் கூறியபடி கழற் சிங்கன் என்னும் பெயரையும் இது வரைக் கூறிய இரு மன்னரும் பெற்றிருந்தாரில்லை. ஆனால் அறிஞர் மீனாட்சி யம்மை யாரும்† இராச மாணிக்கனாரும்* '.........கழல் நந்தி' (நந்திக் கலம்பகம் 13—28) பாடல்களிலும் 'பல்லவர் கோளரி' (59-ஆம் பாட்டிலும்) என்றும் கூறப் பெற்றுள்ளான் என்று கூறுவர்.

கழல் என ஒரு பாட்டிலும் அரி என மற்றொரு பாட்டிலுள்ள தனையும் ஒன்றாக்கிக் 'கழற்சிங்கன்' என்று கூறியுள்ளனர். இதனையும் ஊன்றி நோக்குவாம். 'கோளரி' என்று சேக்கிழார் சம்பந்தரைக் கூறும் போழ்து 'பரசமயக் கோளரி' என்று கூறியுள்ளார். 'கோளரி' சிங்கம் என்னும் பொருள்

---

2. Dr. C. மீனாட்சியம்மையார் 'Pallavas' பக்கம் 161, 162.
3. Epigraphia Indica, Vol. XVIII, Page 13.
†. Dr. C. Minakchi's 'Ad-and S. life under the Pallavas.' P. 300.
* மா. இராசமாணிக்கம் அவர்களுடைய 'பல்லவர் வரலாறு' பக்.

தரும் (பிங்கலம்). சிங்கம் என்று பொருள் தரும் என (Lexicon Vol II) அகராதியில் 1202 பக்கம். 24 வரியில் உள்ளதைக் காண்க. அதனை இரண்டாகப் பகுப்பின், 'அரி' பல பொருள் ஒரு சொல், 'திருமால், கள், கதிர், பிடிக்கதிர், ஏவல், சிங்கம்' முதலிய பல பொருள் உணர்த்தும், ஆதலால் பல்லவர் கோளரி' என்பது 'பல்லவரது பகைமைத் தீமையை அரிந்தவன்' என்னும் 'பல்லவப் பகைஞருக்குச் சிங்கம் போன்றவன் என்னும் பொருள் தருவ தாகும். ஆகவே, இம் மொழியைப் பிரித்து வேறொன்றுடன் கூட்டுதல் பிழை யாகும். ஆதலாலும் 'கழல் நந்தி' என்பதில் கழல் என்பது வீரத்தைக் குறிக்கும் அடைமொழியும் நந்தி என்பது இயற் பெயர் என்பதும் நன்கு புலனுதலாலும் அவர்கள் கூற்றுப்படி 'கழற் சிங்கன்' என்னும் பொருள் படாமையை அறியலாம. அன்றியும் இவனைக் கூறும் பட்டயங்கள் செப் பேடுகளில் ஒன்றில் கூட இவனது இயற் பெயர் சிங்கனென்று கூறப்படவில்லை, அவனுக்குச் சிங்கனென்னும் பெயர் இருப்பின் அதனை அவன் கூறிக கொள்ளா திருப்பானு? இரான். ஆகவே, நந்தி வர்மனுக்குச் சிங்கன் என்னும் பெயர் இல்லை என்பதையும் இவனைக் கழற் சிங்கன் என்று கூறுவது பொருந்தாக் கூற்றென்பதையும் கண்டாம்.

ஆகவே, இதுகாறும் கண்டவற்ருன் தந்தி வர்மனும், நந்தி வர்மனும் கழற் சிங்கன் அல்லன் என்பதும் இவரின் அவன் வேறு பட்டவன் என்பதும் பெற்றும். அவன் யாவன்? என்பதையும் இனிக் காண்பாம்.

இராசசிம்மன் கழற் சிங்கனு?

பல்லவர்களுள் இருவர் சிங்கன் என்னும் பெயருடையவர்கள் முதலாமவன் நரசிம்ம வர்மன் I என்பவனுவன். அவன் திருஞானசம்பந்தர் காலத்தவன் (7-ஆம் நூற்ருண்டில் இடைப் பகுதி) அடுத்தவன் இராசசிம்மன் I அல்லது நரசிம்ம வர்மன் II என்பவனுவன். இவன் சைவனு? என ஆராய்வோம். இவனே காஞ்சியி லுள்ள கைலாயநாதர் கோயிலை எடுப்பித்தவன். இஃதக் காலத்து 'இராசிம்ம பல்லவேச்சுரம்' என்னும் பெயருடையதா யிருந்தது. இக் கோயிலில் இவனது கல்வெட்டொன்று வட மொழியில் வரையப் பட்டுள்ளது. அஃதிவ் வேந்தனைச் 'சிவ சூடா மணி' என்று புகழ்கின்றது. [South Indian Inscriptions Vol No. 24.] இங்ஙனமே மகாபலிபுரம் என வழங்கும் மாமல்லபுரத்து 'இராசசிம்ம பல்லவேச்சுரம்' என்ற கோவிலிலுள்ள கல்வெட்டும் பனைமலைக் கோயிற் கல் வெட்டும் இவனைச் 'சிவசூடாமணி' என்று புகழ்தல் அறியத்

தக்கது. காசாக்குடிச் செப்பேடுகளும் பரமேசுவரனே இராசசிம்ம பல்லவனாக அவதரித்துள்ளா ரென்று சிறப்பித்து கூறுகின்றன.* உதயேந்திரஞ் செப்பேடு 'பரம மகேச்சுரன்' என்று புகழ்ந் துரைக்கின்றது.* வேலூர்ப் பாளையஞ் செப் பேடுகள் இவன் சிவபெருமானுக்குக் காஞ்சியில் கைலாயத்தை யொத்த திருக் கோயி லொன்றை எடுப்பித்த பெருமை யுடையவன்'* என்று உணர்த்துகின்றன. இக் கோயிலில் நரசிம்ம பல்லவனுக்கு வழங்கிய 250 பட்டயங்கள் பொறிக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம். 'சங்கரபத்தன்', 'ஈசுரபத்தன்', 'ரிஷபாலாஞ்சனன்', 'ஆகமப்பிரியன்' ஆகிய பட்டங்கள் இவனை சிவ பத்தன் என விளக்குகின்றன.* 'சிவபெருமானுக்குக் குகன் பிறந்தாற் போலப் பல்லவப் பேரரசனான உக்கிர தண்ட (பரமேசுவரனுக் குச்) சுப்பிரமணியன் போன்ற 'அத்யந்த காமன்' (இராச சிம்மன்) என்னும் பல்லவ அரசன் பிறந்தான்.* என்பதனாலும் சைவன் என்பது வலியுறும்.

மேலும், நெடுங் காலம் குடிகளை எவ்வகை இன்னல்களு மின்றிக் காத்து வந்த பல்லவ அரசன் இவன் ஒருவனே யாவன். காஞ்சி, மாமல்லபுரம், பனைமலை முதலியவற்றில் சிவன் கோயி லமைத்து சிவனடியார்களைப் போற்றி அன்னோர்க்குப் பல நலங் கள் புரிந்தனனே யன்றி வேறு ஒன்றும் செய்ததாகத் தெரிய வில்லை' என்று அறிஞர் 'துப்ரே' அவர்கள் கூற்றாலும் வலி யுறுதல் காண்க.

இவன் காஞ்சியில் கைலாய நாதர் கோயிலை எடுப்பித்து கடவுண் மங்கலஞ் செய்யக் குறிப்பிட்ட நாளிலேயே திருநின்ற வூர் பூசலார் என்னும் அடியவர் மனக் கோவில் கட்டி கடவுண் மங்கலத்திற்குக் குறிப்பிடிருந்தார். இறைவன் அரச னிடம் கற் கோவிலின் கடவுண் மங்கல நாளை மாற்றி யமைக்கக் கட்டளை யிட்டார். இதனை (S. I. I. Vol. I. பக்கம் 12—20) கல்வெட்டா லறியலாம். எனவே, இவனே பெருஞ் சிவ பத்தன் என்பது அங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இவன் காலத் திலே தான் எந்த விதமான போர் முதலியவைகள் இல்லாமல் இருந்ததோடு பேரரசனாகவும் இருந்துள்ளான். ஆதலால்

* S. I. I. Vol. II. No. 73.
* S. I. I. Vol. II. No. 74.
* S. I. I, Vol. II. No. 98.
* S. I. I. Vol. I. No, 25. வரி 55.
* S. I. I. Vol. I. Page 12.

இவனே சுந்தரரால் குறிக்கப்பட்ட கழற் சிங்கன் என்பவனுவன்* என்பது உறுதி யென்று திரு, வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் செய்துள்ள முடிபு வலியுறுகின்றது.

சிங்கன் என்னும் இயற் பெயர் இவனுக்கு உள்ளமையும் கழல் என்பது அரசர்க்குரிய பெருமையையும் வீரத்தையும் உணர்த்தும் அடைமொழி யாகும்.* இயற் பெயருக்கு முன் கழல்' என்னும் அடை மொழியைப் பெய்து கழற் சிங்கன் என்று சிறப்பித்துக் கூறிப் பாராட்டியுள்ளனர் மக்கள் என உணர்க.

அடிகள் காலத்துப் பேரரசன் நரசிம்மவர்மன் II என்பவனே என்பது வேறொரு சான்றுனும் வலியுறுகின்றது. சுந்தரரை இளமையில் வளர்த்தவன் திருநாவலூரில் வாழ்ந்த நரசிங்க முனை யரையன் என்ற சிற்றரசன் என்பது பெரிய புராணத்தால் அறியப்படுகின்றது. முற்காலத்தில் பேரரசர்கள் நமக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்க்கும் அமைச்சர்க்கும் படைத் தலைவர்க்கும் பட்டங்கள் வழங்குங்கால் தம் பெயர்களோடு இணைக்கப் பெற்ற பட்டங்களையே கொடுப்பது பெரு வழக்கா யுள்ளது. இவ் வுண்மையினை கல்வெட்டுகளை ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். காட்டாக இராச ராச மூவேந்த வேளான், மும்முடி வைதும்ப மகாராசன், இராச ராசப் பல்லவ ராயன், முடி கொண்ட சோழ பிரம்மா ராயன், உத்தம சோழப் பல்லவரையன், வேளான் சுந்தர சோழன், இராச ராச வாண கோவரையன், மதுராந்தகன், கண்ட ராதித்தன், க்ஷத்திரிய சிகாமணிக் கொங் காள்வான், மும்முடி சோழ போசன், இராசாதி ராசப் பல்லவ ராயன், கங்கை கொண்ட சோழ மிலாடுடையான், சேனுபதி வீர ராசேந்திர தன்ம பாலன்* என்னும் பட்டங்கள் நெடுமுடி வேந்தர் பெயர்களோடு இணைக்கப்பட்டு இருத்தலைக் காண்க. இதுவே போல் முனையரையன் என்ற பட்டத்திற்கு முன் நரசிங்கன் என்ற பெயர் இணைக்கப்பட்டு நரசிங்கமுனையரையன் என்று சுந்தரரது வளர்ப்புத் தந்தை யாகிய குறுநில மன்னன் வழங்கப் பட்டுள்ளான். ஆகவே,' சுந்தரமூர்த்தியை வளர்த்த நரசிங்கமுனையரையன் என்பான் நரசிம்ம வர்மன் II என்பவனுக்குத் திறை செலுத்திய ஒரு சிற்றரச னுதலின் இவ் வடிகள் இப் பல்லவ அரசன் காலத்தினர் என்பது உறுதி. இவன் காலம் கி பி. 690—710 எனத் திருவாளர் திரு. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் அறுதியிட்டுள்ளார்.*

---

* தமிழ்ப்பொழில் துணர் 3. பக். 206—207.
* ,, ,, ,, ,, 208.

அஃதன்றியும் வேறொரு வகையினும் இக் கருத்து வலியுறுதலைக் காண்பாம். திருமுறைகண்ட புராணத்தில்,

'திருநாவுக்கரைய ரேனும்... ... ...
... ...
... ...

பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப் பிஞ்ஞகனார் அடியிணைகள் பெற்றுளாரே' என்னும் பதினைந்தாம் பாட்டிற்குப் பின்,

'பின்பு சில நாளின்கண் ஆரூர் நம்பி பிறங்குதிரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தா என்றும் இன்ப முதல் திருப்பதிகம்
தொறும் ஈருய் முப்பத் தெண்ணுயிர மதாக... ... ...
... ...
... ...அருளிச் செய்தார்.

* தமிழ்ப் பொழில் துணர் 3 பக், 208, 209.

என்னும் பாடலுள் திருநாவுக்கரசு, அடிகட்குப் பின் அண்மையிலிருந்தார் என்பதனை 'பின்பு சில நாளின் கண் ஆரூர் நம்பி' என்று கூறியதனால் நன்கு விளங்குதலைக் காண்க. இதற்கு முன்னர் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய சேக்கிழாரடிகள்,

'படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன் றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடி நெடுந் தானை மன்னர் கோக் கழற் சிங்கர் என்பார்'
'காடவர் குரிசி லாராங் கழற்பெருஞ் சிங்க னார்தாம்
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரிற் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலங் கவர்ந்து கொண்டு
நாடற நெறியில் வைக நன்னெறி வளர்க்கு நாளில்'*
என்று கழற் சிங்கர் புராணத்திலும்,

'உலகு நிகழ்ந்த பல்லவர் கோச்சிங்கர்'* என்று செருத்துணை நாயனார் புராணத்திலும் கூறியுள்ளவற்றில் 'சிங்கன்' என்னும் இயற் பெயர் கூறப்பட்டுள்ளமையும் இராசசிம்ம பல்லவனே கழற் சிங்கன் என்பதனையும் வலியுறுத்தும்.

---

* பிற்காலச் சோழர் சரித்திரம் I பக்கங்கள். 131, 87, 132, 182, 131, 132, 134, 135, 183, 205, 183, 209.

கழற் சிங்கன் நாட்டை நல்லற நெறியில் வளர்க்கையில் நாடு சுற்றிவர விழைந்தனன் என்றும், அவன் ஆரூர் அடைந்ததும் ஆண்டு நிகழ்ந்தன (முற்கூறியாங்கு செய்தன)வும் மேற்காட்டிய சேக்கிழார் கூற்றால் நன்கு வலியுறுதலையு முணர்க. காஞ்சியில் கைலாயநாதர்க்குக் கற்றளி யெடுத்ததும், பூசலார் மனக் கோயில் கட்டியதும், கடவுண் மங்கல நாள் மாற்றியமைக்க 'வானொலி' கேட்டதும் இராச சிம்ம பல்லவன் காலத்தில் நிகழ்ந்ததாகும்.

இதனை,

'இவன் சைவ நெறியில் நடந்து மலத்தை எல்லாம் ஒழித்தவன்; இந்தக் காலத்தில் தேவரைக் கண்டவன்; துஷ்யந்தன் முதலானோர் வான் ஒலி கேட்டதில் வியப்பில்லை. நற் குணம் பறந்தோடிப் போன இக் காலத்தில் அவ் வான் ஒலியை ஸ்ரீ பரன் (இராசசிம்மன்) கேட்டது வியப்பே. இவன் 'கலி' என்னும் மகரம், குடிகளை விழுங்கிய போது அவர்களைக் காத்தவன். இவன் பரந்து கிடக்கும் இச் சிவன் மந்திரத்தை (கோவிலை)க் கட்டினான். இஃதிவன் புகழைப் போலவும் அணியைப் போலவும் இருக்கின்றது. பாம்பாசனை அணியாகக கொண்டவனும் தேவ அசுர கணங்கள் போற்றுபவனும் ஆகிய சங்கரன், இந்த இராச சிம்ம பல்லவேச்சுரத்தில் நெடுங் காலம் குடிகொண்டு இருக்கட்டும். இடபத்தை அடையாளமாக உள்ளவன் இந்தக் கோவில் காட்சி கொடுப்பானாக. ரணசெயனும், ஸ்ரீ பரரும், சித்திர கார் முகனும், சிவ சூடாமணியு மாகிய இவன் சைவ சித்தாந்தப்படி நடப்பவன் மகா தேவனுக்கு அடியவன்'* எனக் கூறுகின்ற கல்வெட்டுப் பகுதியான் நன்கறியலாம். ஆகையால் இத்தகைய பல பொருத்தங்கள் கழற் சிங்கன் இராமசிம்மன் I என்பவனுக்கு அமைந்துள்ளது போல் ஏனையோர்க் கில்லாமையானும் இவனே கழற் சிங்கன் என்பதும் வலுவாதலைக் காண்க.

இதுகாறுங் கூறியவாற்றான் தந்தி வர்மனும் தெள்ளாறு எறிந்த நந்தி வர்மனும் கழற் சிங்க னாகார் என்பதும் இராச சிம்மன் I என்பவனே கழற் சிங்கனவன் என்பதும், கழற் சிங்கன் காலத்திலே தான் பூசலாரின் நின்றவூர் நிகழ்ச்சியும், திருவாரூர் நிகழ்ச்சியும் நடைபெற்றதென்பதும் இவனே சமயத்தாலும், காலத்தாலும் ஏற்புடையனவன் என திரு. வை. சதாசிவனார் கருத்தே சாலச் சிறப்புடையதென்றும் நிறுவிக் காட்டினும்.

---

* பெரியபுராணம் கழற் சிங்க நாயனார் புராணம் பாட்டு 1. 2.
* ,, செருத்துணை நாயனார் புராணம் ,,
* S. I. I. Vol I. Page 20.

கீசனைஎயிற்றியார்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி, துணர் உஅ, மலர் ௩, பக்கம் எசு)

'நாம் நம்மிற் பிரியோம்' என முன்னர் எயிற்றியாருக்குத் தலையணி செய்த கீரர், இதுபோது உரம் புரி உள்ளமொடு போர் மேற் செல்லவே, தனிமை யுற்ற எயிற்றியார், நீர் வற்றிய தடத்து நெய்தல் மலர் சிறிது சிறிது மலர்ந்து வாட்ட முறுவது போன்று அழகு மழுங்கி யிருந்தார். மற்றும் பிரிவால் தன் செய லொருங் கழியவே, நீர் நிலை துறந்த கய லொப்பவு மிருந்தார். விளங்கிய கலனணிந்த எயிற்றியார், மங்கலம் குறிக்கும் அணியும் சில் வளையும் தவிர மற்ற புனைவன யாவையும் வாடிய துன்பத்தோடும் வருத்தத்தோடும் கழற்றினர். கழுத்தின் மற்றைய அணி யலையும் காதின் அணி மகர குண்டலத்தையும் திரு நுதலின் சாந்தையும் சுமத்த லாற்று திருந்தார். பசலையும் தலைவரது பிரிவு நோக்கி இவரது மேனியில் ஒளிந்திருந்தது. எயிற்றியார் ஒரு பொழு தின்றி யொரு பொழு துண்ணும் வழக்கங் கொண்டார். உரு வளர்ச்சிக் குரிய அறு சுவையோடு கூடிய நால் வகை உணவுகளையும் வெறுத்தார்,

அளவில் உள்ளந் தளர்ந்ததால்,' எயிற்றியாரின் அழகு பொலியும் மேனி வாடிடவே, அவர் தம் மேனிக்குப் பயந்து மாமரங்களும் தளிரீன் றறியா வியல்பினை யுற்றன. விலங்கினங்கள் தம்மால் காக்கப் படுவனவற்றைக் காவாதும் இரை தேர்ந் துண்ண இன்புறுதும் நின்றன. மேனி மெலிந்து ஒளி வாடி விழி பிறிதாகியும், அன்னப் பெடை யொத்த நடையுடையார் நடக்க வலியிலதாகி மெல்லணையே துணையாகக் கொள்வார். ஆங்கும் இளங் கொடி போல் நுடங்கி மென் மான் போல் விழித்து சிறிது கண் ணுறக்கமும் கொள்ளார். பல மாட்சிமைப்பட்ட பாயலில் புண் ணுற்றாரைப் போன்று புரண்டு புரண்டு அசைய, அப் படுக்கையினையும், பகையாகக் கருதினர். கண்கள் துயிலப் பெருமையால் உறக்கத்தின்

கண். உடன் நிகழுங் கனவிலும் தங் காதலரைக் காணப் பெற்று ரில்லே. உள்ளும் புறமும் வெதும்பி வெய்தாக உயிர்ப் புற்று தனிமையின் தன்மையால் இன்ப மிழத்தலும் துனப முறுதலும் இவருக்கு இயல்பாயிற்று. எனினும் பிரிந் துறைவதா லெய்திய துன்பம் பொறுத்தற் கரிய தாயினும், மீண்டும் தங் கணவரைத் திடமாகச் சாரலா மென்ற உறுதி நோக்கானது அப் பிரிவின் துயரத்தையும் பொறுக்கக் கூடிய நிலேயினை யுதவியது. ஆனாலும், அவரது வருத்த முற்ற உள்ளம் பல வாய கவலேயும் கொண்டது. மழலே மாருது இள மடந்தையாயிருக்கும் போதே விருந்து புறந்தரூஉம் பெருந் தண் வாழ்க்கையில் பழகிய எயிற்றியார், அன்புடைய தங் காதலர் தன்னே நினையாததால் தனக்குத் தும்மல், புரை யேறுதல் முதலியன மில வாதலின், அவர் கருதிலரே யென்று கலங்கிய வண்ணமாய் இது போது புலம்பொ டுறையும், புன் கண் வாழ்க்கையினே எய்தினர். என்றாலும், எயிற்றியார் தம் பெண்மை யியல்பால் தம் முள்ளத்தைப் பேதுரு தடக்கி அமைதி யுறும் நிலேயினே மறுவப் பெற்றார்.

எயிற்றியாரின் உயிரின் தன்மை வேறு படப் பிரிந்த கிரர், போர்க் கருவிகளே வீரர்களுக்குத் தந்து பின் போர் மாலேயினே சோழ மன்னரால் அணியப் பெற்று நாற் படை யும் புடை சூழ, கொற்றவையை வழிபா டியற்றுங் காலே, வினே வயிற் ஊக்க மூட்டி சிறப் புயர்வைக் காட்டும் எயிற்றி யாரை உணர்ச்சிப் பிழம் பெனக் கருதினர். 'தன்னிற் பிறிந் தறியாதார் குறித்த பருவத்தில் மீண்டுளேனாயின் யான் அற னல்லது செய்தவனுவேன். இடர்ப்பாடுறுது வினேயை விரை வில் முடித்து ஊறு மின்றி மீள நின் னருளே வேண்டுகின்றேன் என கொற்றவை முன் விரையார்ந்த மலர் தூவி இறைஞ்சி நின்றனன். வழிபாடு தரும் வன்மையோடு திரண்ட தானே சூழப் பெருங் கடல் நடுவண் செல்லும் வங்கம் போல, கண்ணி சூடி வீரக்கழ ல்ணிந்த கிரர், போர் கருவிகள் பேரொலி செய்ய விரைந்து செல்வாராயினர். பாடினியின் படை யெடுப்புப் பாட்டு போருணர்ச்சியினே யூட்ட, 'வெற்றி பெருக. சோழ வேந்தன் கொற்றம், வாழ்க' என்ற படை வீரரது ஒலி முழங்கச் செல்லும் கிரன், எதிர்ப்பட்டார்க் கெல்லாம் பெரும் பொரு ளளித்து உவகையோடு ஏகும்பொழுது சோணுட்டின் எல்லேக் கண் ணுறைவோர் வெற்றி வேண்டி போர்ப் பறை

கொட்டி களித்தனர். மிக்கத் தொலையிலுள்ள பகை யரசன் நாட்டிற் கண்மையிற் செல்ல, பல நாட்களாயின.

இகல் கொண்ட மலை நர்ட் டரசன் மீது படை யெடுத்து செருச் செய்யத் தொடங்கு முன், ஆற்றலில் கூற்றனினும் மேம்பட்ட கீரர், 'சோழ வேந்தரது சொற் கேட்டு அவர் வழி நும்மரசன் வாழாமையின், வள மோங்கிய நுங்கள் நாடு பாழ் படும். இஃதோ டமையாது காடாகியும் விளியும்.' என்று தான் போந்த செய்தியை மலை நாட்டு மக்களுக்குப் பறை சாற்றச் செய்தார். மற்றும் திறை கொடாமை காரணமாகவும், நாடாட்சி காரணமாகவும் சோழ வேந்த னுற்ற பகைமையினை யும் அம் மலை நாட் டரசனிடம் உணர்த்தி, 'அவன் மற முடையனுயின் போர் முனையின் கண் அமரியற் றட்டும். அல்லாதாயின் அறமுடையவனுனல் ஆணைக்குட் கடங்கி போரை நிறுத்தட்டும்' என பெரு மிதக் கொற்றம் விளங்கப் போர்ப் பறை யொலியுடன் அறிவித்தான்.

செருமுகத்தே இகல் கொண்ட இரு படையும் கை கலந்து மன வெழுச்சியுடன் பொரலாயின. குருதி யாறு, மழை நாட் புனல் போல் பள்ளம் நோக்கிப் பாய, கொடும் போர் பல நாட்களாக நடந்தது. மேகத்தைக் கிழித் தெழும் மின்னலைப் போன்று விளங்கும் வேற் படை கொண்டு கீரர், கொல் சினக் களிறே போன்று எதிர்த்தும், கீரரது படை வெற்றி உற்றிலது. இவரது தேர்கள் முறிந்து துகள் பட சேனைகள் சிதைந்தன. அம்பு மாரி பொழிந்தும், அக் குரோணிகளும் அழிந்தன. பருந்தின் சேவல்கள், அலை கடல் நாண, பெடையுடன் ஆர்த் தெழுந்து, வாளினுல் வெட்டுண்டு இறந்து பட்ட வீரர்களது குருதியினைப் படிந்து உண்டும், மடிந்த வேழங்களின் கொழு விய தசையினை யருந்தியும், வானத்தே வட்ட மிடலாயின. உருவெழு கூளியர் உண்டு மகிழ்ந் தாட, போரின் போக்கினைக் கண்ட கீரரது மொய்ம்பினையுடைய படை வீரர்களும் மானத் தால் வலி குன்றி வெந் துயராற் புழுங்கி யிருந்தனர். தன் படைஞர் பலரும் மடிந்த ஞான்றும், வெற்றியினுடே தோல்வி யும் பெற்று, கீரர் புகழும் வீரமுங் கொண்டு விளங்கினர்.

போர் நிகழுங் காலையில், மறங் காட்டும் பறந் தலை யருகே, வெய்யோன் தானுழையா நெல்லியஞ் சோலையில் கீரர் கட்டூர் ஒன் றமைத்தார். அச் சோலை நீர் மிக் கிருப்பதோடு கோடை

யும் கொண்டலும் கண்டறியாத குளிர் நிழலும் நன்குடையதாயிருந்தது. ஆங்கே போர்க் கருவிகளைக் காப்பதற்காக மறைவிடமும், படைக்காகிய உணவுப் பொருள்களைச் சேமிப்பதற்காக அறைகளையும் இன்னும் பல படைக் கல கொட்டில்களையும் சமைத்தான். பகையாயினாரைக் குத்தி யழித்ததால் கங்கும் நுனியும் சிதைவு பட்டிருக்கும், அம்பு, வாள், வேல், சூலம் முதலியவற்றைச் செப்பனிட கொல்லர் உலைகள் பல நிறுவினான். போர் வயின் மேற்செல்வார்க்கு வன்மை யளிக்கும் நீர்ச் சோறும் நெல்லிச் சுவைக்காயும் வழங்கப்பட தெங்கங் கீற்றான் முடைந்து புனைந்த பெரும் பந்தரிடப்பட்டது. அதனைச் சூழ்ந்து ஒன்றோடொன்று பிணிப்பு கொள்ளுமாறு மூங்கில் முள் வேலி இணைக்கப்பட்டிருந்தது. ஆங்கண், கதநாய்கள் காவலுறும்படி பாசறையும் வீரர் சமைத்தார். துஞ்சாமற் காக்கும் காவலை மேற்கொண்டாரும் பாசறையைச் சுற்றிய வண்ணமா யிருந்தனர். மாட்சிமைப் பட்ட காவலையுடைய பாசறையின் ஓர் புறத்தில், வேழத்தின் கோட்டினால் தொடர் வேலி கோலி, ஆங்கே, வீரன் பகை மன்னனை வெல்லும் வகை யாதெனச் சூழ்வானாயினான். வெற்றி பெறுமைக்கு எல்லியும் பகலும் நெடிது நினைந்து போர் புரிந்த முறையில், தவறுபாடுடையது யாதெனத் தேர்ந்தான். அடுக் கடுக்காக வந்துற்ற இடுக்கணைத் துன்பமாகக் கொள்ளாது தோல்வி யாவும் இவற்றியாய் மாற, இனி நடக்க விருக்கும் போருக்கு முன் முயற்சியாக நடக்க வேண்டிய போர்த் தொழில் முறையில் கண்ணுங் கருத்துமா யிருந்தான். இஃதோடு நில்லாது, போரின் கண் பெரும் புண்ணுற்றாரையும், மூச்சின் இயக்கம் அற்றவர் போன்றிருப்பாரையும், ஓரியும், நரியும், பாறும் துன்புறுத்தா வண்ணம் பாசறைப் பக்கல் கொணர்ந்து அவர் தம் அருகிருந்தும் சிகிச்சை செய்து அன்னாரையுங் காத்தார்.

இவ் வண்ணம் பாசறைத் தொழில் ஈடுபட்ட வீரர், பின்னர் படைஞர்களைக் கூட்டி வெற்றி யுறும் முறையினை அவர்களுக்குப் புகட்டி அன்னாது தோல்வியைக் கொண்டு வீர வுணர்ச்சியினைக் காட்டினார். கருநா வுடைய வீரர், ‘திறலுடையீர்! நாட்டின் உரிமைக்கு பாடுபடுவது நம் யாக்கைக் குற்ற பெரும் பயன். உரிமை மேல் ஆண்மையும் வீரத்தையும் பாராட்டாது கொன்னே யிருந்தால் சுதந்திரக் கேண்மை நம் பாலில தாகும். சுதந்திரக் கேண்மையினைப்

பேணுமை யொன்றே, அமிழ்தினு மினிய நம் தமிழ் மொழி யினைப் பற்றி பேசும் உரிமையினைப் பறிக்கும். நவை யிலாச் சொல்லுடைய சோணாடு சிறக்கத் தமிழ் வெல்க! என வீறு கொள்வதே நமது விருப்பாகும். தமிழ் மொழிச் சுவை குன்றுதவாறு தமிழன்னைக்கு மேன்மை நாடி ஒன்றுபட் டுழைப்பதே வீடாகும்! எனக் கேளாரும் வேட்ப அறி வுறுத்துவா ராயினர். பின் தன் வலியும் மாற்றான் வலியும் ஆகிய இரு வலியும் தூக்கி தன் வலி குன்றி யிருத்தலை அன்னார்க்குக் கலங்கா வுள்ளத்தோடு எடுத் துரைத்து முன் கண்ட தோல்விக்குப் பெருமையினையும் அளித்து துன்பத் திற்கு அணியும் செய்வா ராயினர். ஆய்ந் துணர்ந்த வினைக் குறிப்பினை, இகல் கொண்டார் அறியசா வகை, காய்ந் தெறி கருங் கல்லைக் கவுளில் கொண்ட களிறே போல், மறைத்து அருந் திறல் புரிய அடக்க முடையரா யிருந்தார்.

இங்ஙனம் அறிவமைதி நிறைந்த உள்ளத்தால் மாற்று னது வலியினை அறியும் ஆற்றல் கொண்டு போர்த் தொழில் வல்ல ஏறுயவராய கீரர், அணி வகுத்து பகைவரது ஆக்கங் கெட, கொல்லும் வலி மிக்க வேற் படையுடனும், வெல்லும் வில் லேந்திய போர் வீரர்களுடனும், சேட் புல மெங்கும் சென்று பகைப் படைகளைத் துண்டு படுத்தி, உள்ளம் துளங்க 'பற்றுதிர், சுற்றுதிர், எற்றுதிர்' என எதிர்நது, அப் படை கள் யுடைந் தொழியுமாறு முறி யடித்தார். கீரரது வீரரும் தோள் புடைப்ப, எறி கோலுக்கு அஞ்சா அரவினைப் போன்று எதிர்த்தும், அம் பொடு வேல் நுழை வழி யெல்லாம் நின்று பொருவா ராயினர். பங்காளிக்குத் துரோகம் புரிவோர் தங் கிளையொடு பட் டழிவதே போன்று பகைப் படைகளும் ஒழியலாயின. பகைப் புலத்துக் களிற்று யானைகளும் கையில் புண் பட்டு மருப்பு மிழந்து துன்புற்று புறங் கொடுத் தேகி னதை மடப் பிடிகள் கண்டு உண்ணாது உயங்கின. பறந் தலை யின் காப்பண் திரண்டு வந்த பகை வீரர்களை ஒருசேர கீரரது படையினர் வெட்டி வீழ்த்தினமையான், குருதி உறைந்து படிந்த நிணக் கொழுஞ் சேற்றிடத்தைப் பேய்கள் மன்றமாகக் கொண்டு, குரவையும் துணங்கையும் மகிழ்ந் தாடின. வில்லோர் பெரு மகனாகிய போர் வலி மிக்குடைய கீரர் மறப் பண்பு வாய்ந்து தமது பலவாயப் படைகளை காவ லரண் சிதையுமாறு பரக்க விட்டு, தான் ஒரு சிறு படையோடு

காங்கு போரற் சுழன்று திரிந்து முரு குறழ் வலியோடு பொருது சற்று கூற்றுவனும் மன மிரங்க பகைவர்களைக் கொன்றும், அடிப் படுத்தியும் புறங் கண்டும் தன் வென்றிச் சிறப்பினை நிலை நிறுத்தினர். போர் முனையில் விழுப்புண் ணுற்ற பகை மன்னனும், ஏறுதற்குத் தேரும், எதிர்த்து நிற்றலுக்கு ஆற்றலு மிழந்து மனமும் புண் பட்டு, இறைவ னது கழலை ஏத்தாதார் புலனென்ன வருந்தி, இடியே றுண்ட நாக மென படிமிசை வீழ்ந்து, தன் புண்ணைப் பெரிதாகக் கிழித்து குருதி வெள்ளத் தினிற் படிந்து மடிந்தான். வெற்றி முர சமதிர்ப்ப, வீரர், பகைவரது முரசை கைக் கொண்டு அவரது அரண் மிக்க அரணையுங் கைப் பற்றி முரண் மிகு சிறப்புடன் வெற்றி பெற்றார்.

பகைவரால் விரும்பப்படும் செம்மாப் புடைய வீரர், தம் பால் சரண் புகுந்த நாட்டினர் யாவர்க்கு முண்டாய துன்பத் திற் கஞ்சி அதனைப் போக்குவதில் நாட்டங் கொண்டு, நாட்டினரைக் கைவிடாது காக்கும் திண்மை யியல்பினும் அறக் கிழமையினை குடிகள் பால் அருளும் மாண்பினும் இனிய தன்மையு முடையராய் உள்ளந் தழைத்திருந்தனர். எனினும், பிரிவால் அயர் வுறும் தங் காதன் மனைவி மாரை இனி ஒரு பொழுதும் மறந்து உறைகுவது இசைவதாகாது என்ற வுணர்வு, முற் பிறவியின் நிகழ்ச்சி போன்று நினைவிலே திண்ணமா யமைந்து தன் னுள்ளத்தைக் கலக்குதலையும், வீரர் அறியப் பெற்றார்.

வீரனைப் பிரிந்ததால் துன்பம் தரியாது தவிக்கும் எயிற் றியார், தம் செறித்த கருங் கூந்தலினும் நெடிய தோளினும் தங்கிய தொன்னலஞ் சிதைந்து போயினும், அவர் தங் கணவரை இடைவிடாது நினைவித்து தன் னெஞ்சத் திருத் தினர். தங் கணவரை நெடிது காலம் பிரிந்திருக்க, தான் செய்த தவக் குறை யாதோ வென வெண்ணி, மயல் கொண்டு, தன்னை விதித்த மறையவனும் கலைமகளைப் பிரிந்திருந்தால் தனக் குற்ற வருத்தத்தைத் தெரிந்திருப்பா னெனத் தன் தலை விதியை நொந் திருந்தார். பொழுது விடியக் கண்டிருந்த இவர்களது கண்களி னின்றிழியும் நீரின் வெம்மையால், கொழுவிய அவர் தம் கன்னம் வறண்டு வற்றின நிலையினை யெய்தியது. நுண்ணிய இடையும் நனி நுணுக, மேனியின் வண்ணம் வெளிறியது. இவர் படும் பிரிதற் றுன்பத்தின்

ஒறுக்கும் நேர்மையினை தன் னுழை யிருக்கும் தோழியரைத் தவிர பிற யாரும் உரிமை பாராட்டிக் கேட்பா ரில்லாமை யான், அயர் வுயிர்த்துத் தானே ஆற்றிக் கொள்ளுதல், பயன் எனக் கொண்டு தன் னடக்கத்துடன் தங் கணவரே உயி ரெனக் கருதும் கற்பின் உறுதியில் நிலைத் திருந்தார்.

இவ் வண்ணம் எயிற்றியார் காதற் கனலை அக முகப் படுத்தி கடவு ளுணர்வுடன் தங் கற்பினைத் தீதறக் காக்க, அக் கற்புடைமை தரும் அற்புத நிலை அவர் தம் கல்வி யறிவோ டிழைந்து நிற்கவே, வீறுடைக் கவிதை அவர் தம் அகக் காத லுணர்ச்சியில் தழைத்தது. இதனான் இது வரை மனக் கவலையினைக் கொடுத்த இவரது காத லன்பு, நாணத் தோடு பொறுக்கும் நிலையினை யெய்தி பின் களிப்பினை அளிக்க வல்லதா யிருந்தது. கற்ற அறிவை வளர்க்கும் வாய்ப்பினை, க்காத லன்பும் கற்பின் உறுதியும் விளைத்தலால், நாவிற்கு இனிமையும் மனத்திற்குப் பொறுமையும் எயிற் றியார்க்கு இயல்பாய் வந்துற்றன. இனிமை யிடத்தும் பொறுமை யிடத்தும் உறவு கொண் டெழுந்த இவரது கவிதை, இவரது உள் ளுணர்வை யெழுப்பி சொல் லழகிலும் பொருட் செறிவிலும், யாப் பெழிலிலும் பொசிந்து, தேசுற்று, ஆக்கும் கவிதையாக அமைந்தது. இக் கவிதை வழி, அறு வகைச் சுவையினைத் துறந்த எயிற்றியார், தம் மன அசை வினைப் புலப்படுத்தும் வகையில், செவியான் நுகரப்படும் சொற் சுவை, பொருட் சுவையினை வழங்கி, கற்பார்க்கு நுண் ணறி வின்பமும் கழி பெரும மகிழ்வும் விளைத்தார். விருந் தயரும் விருப்புடையார், பரிவொடு பாத்துண் வழங்க, கீரரோடு வாழ்வு பெறுததற்கு மன முடைந்து, தன் துயருறு நிலையினை ஆற்றிக் கொள்ள, தமிழ் மொழியின் அளப்பருஞ் சுவைகளைத் தம் புலமையால் யாத்த செய்யு ளுருவத்தில் வயங்குமாறு காட்டி கற்றறிவாளர்க்கு விருந்திடுவா ராயினர். இதனான் இவரது கல்வி யறிவும், இயற்கை யறிவும் திகழு மாறு இவரது புலமை நலம் மிக் குயர்வதாயிற்று. எழில் முதிர்ந்த இயற்கைப் பொருள்களை வழாது உணர்ந்து, அறிந் ததனை பிறர்க்கு உணர்த்தி இன்பஞ் செய்யும் பெற்றியிலும் இவரது புலமைச் செல்வம் புகாறு சிறப்புடையதாய் பொலி வுற்றது. மற்றும், எயிற்றியார் தாம் கண்ட இயற்கையின் எழிலைத் தாம் கொண்ட குறிப்பி லேற்றி, இலக்கண நெறி

வழாது அமைத்துச் செய்யுளாக்கும் பண்பு, அவரை நல்லிசைப் புலமையுடைய மெல்லியார்களுள், புலவர் மாமணியாய்த் திகழ வைத்தது.

சான்றோர் கவி யொத்த தெளிவுடைய எயிற்றியாரது புலமை உள்ளம், பிரிவின் கண்ணும், கற்பு நிலையில் கலங்காத திண்மையுடன், கற்றல், கேட்டல், காண்டல், ஏற்றுக் கோடல், ஒப்பு நோக்கல் முதலியவற்றான், வீறுற்றல் பெற்று விளங்குங் காலை, போர் மேற்செலற்குத் தங் கணவரைத் தான் ஒருவாறு தேற்றி விடுத்ததை நினைவிற்குக் கொணர்ந்தனர். அது போது தங் கணவரது மனம் எவ்வெவ்வாறு நினைந் தேங்கும் என்ற அவர் தம் மன நிலையினை உணர்ந்து, அவர் வருந்தியதைத் தொகுத்து தன் னெஞ்சமொடு கொத்ததை எயிற்றியார் தன் ஆற்றலுக்கும் அறிவிற்கு மேற்ப பின் வருமாறு செய்யு ளுருவில் எடுத்துக் காட்டுவாராயினர்.

நோகோ யானே நோ மென் னெஞ்சே
பனிப் புதலீங் கைக யங் குழை வருடச்
சிறை குவிந் திருந்த பைதல் வெண் குருகு
பார்வை வேட்டுவன் காழ் களைந் தருள
மாரி நின்ற மையலற் சிர
மயர்ந்தன ளுழைய மாகவுந் தானே
யெதிர்த்த தித்தி முற்று முலையள்
கோடைத் திங்களும் பனிப் போள்
வாடைப் பெரும் பனிக் கென்னள் கொலெனவே.

(நற்றிணை—312)

என் நெஞ்சமே ! கோடைத் திங்களில் என் காதலி அருகிருந்தும் நடுக் குறுவாள். கார் முதலாய நால் வகை பருவ காலத்தும் தமியளாயிருந்து என்ன பாடு படுவளோ ! என யான் நோகின்றேன். எனது நோயின் தன்மை யறியாமல் நீ புலக்கின்றனை ! என்பது இப் பாட்டின் பொழிப் பாகும்.

(தொடரும்)

உமர்காயம் யாத்த (ரூபாயத்.)

(மெய்கண்டான்)

(முற்றொடர்ச்சி: துணர் உஅ, மலர் ந, பக்கம் 84)

21

காதலியே! சென்ற காலத்துயரையும், வருங்கால பயத்தையும் துடைக்கும் மதுவைக் கிண்ணம் நிறை வார்ப் பாயாக. நாளையென நவிலாதே. ஏனெனில் நாளையெனில் கழிந்த ஏழாயிர மாண்டுகளில் யானு மொருவனுவேன்.

22

அன்பர்களும், நண்பர்களும், சிறந்தவர்களும் நெடுங் காலமிருந்தாரெனினும் அவர்களும் ஒருமுறை, இருமுறை மது அருந்தி மெதுவாகவும், அமைதியாகவும் நிலைத்த ஓய் விற்குச் சென்றனர்.

23

நிலைத்த உறக்கத்திற்குச் சென்றவர்களின் அறையிலே அகமகிழ்கிறோம். வெம்மை காலம் புத்தாடையில் பொலி வுறுகிறது. மண் அடியிலிருக்கும் படுக்கைக்கு நாம் கட்டா யம் செல்லவேண்டும். நாம் யாருக்காகப் படுக்கை ஏற் படுத்த வேண்டும்?

24

மண்ணோடு மண்ணுதற்குள் அடைதற்குரியவைகளை யடைதல் வேண்டும். மது உடையவனும், பாடகனும், பாடகியும் மண்ணோடு மண்ணுயினர்.

25

ஒரே நிலையுடைய இன்றைக்குரிய இனிய திட்டம் இயற்றுபவர்களுக்கும்—நாளைக்குரிய நல்ல திட்டத்திற்கு நாடுபவர்களுக்கும் இருளாகிய கம்பத்தினுச்சியிலிருந்து, "மடையர்களே! உங்களுக்குரிய பரிசு இங்குமில்லை அங்குமில்லை" என அறைகிறது.

26

ஏன்? ஏனைய துறவிகளும், பத்தர்களும் இருவுலகைப் பெரிது மாராய்ந்தனர்; என்றாலும் அவர்கள் மட தீர்க்க தரிசிகளைப்போல் விறட்டப்படுகின்றனர்; அவர்களின் வார்த்தைகள் புறக்கணிக்கப்படுவதாயிருப்பதால் சிதறி யடிக்கப்படுகின்றன. அவர்களுடைய வாய்கள் புழுதியால் மூடப்படுகின்றன.

27

யான் சிறுவயதில் புலவர்களையும்—துறவிகளையும் அடிக்கடி கலந்து அவ்விரு வுலகங்களைப்பற்றி யாராய்ந்த துண்டு; ஆனால் பல வாதங்கள் மீண்டும் மீண்டும் உரைக் கப்பட்டன; என்றாலும் யான் சென்ற கதவு வழியேதான் மீண்டும் திரும்பி வந்தேன்.

28

அவர்களுடன் ஞானமென்னும் வித்தை விதைத்தேன்; என் கையால் பாதுகாத்து வளர்த்தேன்; யான் பெற்று அறுவடை, "புனலாக வந்து—காற்றாகச் சென்றேன்," என்பதே.

29

எப்பொழுது பிறந்தோம் இவ்வவனியில் என்றறியாது தந்திரமாம் ஓடைபோல் ஓடுகிறோம்; அவணிருந்து எங் கென்றறியாது புழுதியிலடிக்கும் காற்றுபோல் அலை கிறோம்.

30

என்ன? வினவுதலின்றி நண்ணுவதெப்பொழுது? வினவுதலின்றி நண்ணுவதெங்கு? இவை யனைத்தையும் பல கோப்பை மது மூழ்கடிக்கும்.

31

உலக நடுவிலிருந்து ஏழாம் வாயில் வழியே மேலேகி சனியின் மணிமுடி மீதமர்ந்தேன். பல சிக்கல்கள் அவிழ்ந் தன; ஆனால் பெரிய சிக்கலாம் மனித விதி அவிழ்க்கப்பட வில்லை.

32

ஆங்கிருக்கும் கதவுக்குத் திறவு கோலில்லை; ஆங்கிருக்கும் திரை மூலம் பார்க்கவும் முடியவில்லை; சின்னேரப் பேச்சு எம்மைப் பற்றியும் உம்மைப் பற்றியுமிருந்தது; பின்னர் ஒன்றுமேயில்லை நம்மிருவரைப்பற்றியும்.

33

கை விடப்பட்ட தலைவனைப்பற்றி பூமியாலும் பகர முடியவில்லை; புலம்பும் நீலநிறக் கடலாலும் கூற முடிய வில்லை; அவன் சின்னங்களை விளக்கவே சுழன்று திகழும் விண்ணுலும் முடியவில்லை; மிகச் சிறிய துணியாம் பகல் இரவால் மறைக்கப்பட்டுளது.

34

என்னுள்ளே இருக்கும் நீர், திரைக்குப் பின்னர் யாவும் புரிகிறீர்; ஆதலால் என் கையை உயர்த்தி இருளி டையே விளக்கிற்குத் தேடினேன்; அப்பொழுது வெளியி லிருந்து செவியுற்றேன், "என்னுள்ளே இருப்பது விழி இழந்தது"

35

வாழ்க்கையின் இரகசியத்தை யறிய மதுக்கோப் பையை உதடுவரை உயர்த்தினேன். உதடுக்கு உதடு உரைத்தது–" உயிருடனிருக்கையிலே மது அருந்து! ஏனெ னில் ஒருமுறை இறந்தால் மீண்டும் மீளாய்"

36

வாழ்ந்து–மதுவில் மூழ்கிய நிலையில்லா உடல் தெளி வாகக் கூறியது. "ஆ! அமைதியான உதட்டை முத்த மிட்டேன், எவ்வளவு முத்தங்களை ஏற்றிருக்குமோ? எவ்வளவு முத்தங்கள் திருப்பித் தந்திருக்குமோ?"

37

வழியே சென்று கொண்டிருக்கையில் குயவன் மண் பிசைந்திருந்ததைக் கண்ட நினைவு வருகிறது; குழறும் மொழியால் முணு முணுத்தது—" பொறுமை—அண்ணு– பொறுமை—வேண்டுகிறேன்"

38

தண்ணீர் கலந்த மண்ணால் உற்பத்தியாளன் மனித உருவமைத்தானென்ற கதை மக்களிடையே பண்டு தொட்டின்று வரை நிலவ வில்லையா?

39

மண்ணருந்த ஒரு துளி மதுவையும் அளிக்கிறோமில்லை மண்ணிற்கு; ஆனால் மண்ணடியில் நெடுங் காலம் பதுங்கி யிருந்த விழிப் பிழம்பில் மறைந்திருக்கும் கவலையை, நம்மை யறியாது சிதறி விழும் மதுத் துளிகள் துடைக்கு மன்றோ!

40

தூலிப் மலர் காலையில் தெய்வீக மதுவிற்கு மண்ணகத் திருந்து விண்ணகத்திற்குக் காத்திருப்பதைப் போல, விண் ணிலிருந்து மண்ணிற்கு மது வரும் வரை வெறுங் கிண்ணத் தைப் போல் காத்திருக்க வியலுமோ!

41

மனித இயலைப் பற்றியும்—தெய்வீக இயலைப் பற்றி யும் குழப்ப முறுதே; அடுத்த நாள் பற்றிய குழப்பம் காற்றுடன் விலகும்; பசிய இனிய திராட்சைக் கொடியிலே உன் விரல்கள் தோய்ந்து கிடக்கும்.

42

ஆம்! அவ்வுயரிய திராட்சை மதுவை நீர் பருகினும், நீர் உதடுகளைச் சுவைப்பினும், தொடக்கத்தைப் போன்றே முடிகிறது; முடிவுறுகிறது; ஆதலால் நேற்றிருந்ததைப் போன் றின்றுள்ளீர்; நாளை குறை வெய்திர்.

43

இருள் மதுத் தேவன், உம்மைப் புனல் கரை யோரத்தே காணின், உம் உயிரை அழைத்து மதுவைப் பருக, மதுக் கோப்பையை உம் உதடுகள் வரை உயர்த்து கையில் புறக்கணிக்காதே.

44

புழுதியாம் உடலைத் தள்ளி நிர்வாணமாய் விண்ணிடை ஏகின், முடவனைப் போலிவ் வுடலில் உறைந்து கிடக்கு முயிருக் கவமான மல்லவா?

(தொடரும்.)

துயரம்

திரு. ப. ச. நடேச பிள்ளை அவர்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1983, ஆனி, 28ஆம் நாள் (11-7-52) வெள்ளிக் கிழமை இரவு செந்தமிழ்ச்செல்வரும், நம் சங்கத் தொண்டரும் ஆகிய வித்துவான் திருவாளர். ப ச. நடேச பிள்ளை அவர்கள் மறைந்த கொடுஞ் செய்தி கேட்டு அளவிலாத் துயர் அடைகிறோம்.

திரு. பிள்ளையவர்கள் தண்டமிழ்த் தாயிடத்துத் தனியன்பு பூண்டு பணியாற்றும் உண்மைக் கருத்துடன் சென்ற பல ஆண்டுகளாக நம் சங்க உறுப்பினரா யிருந்து தமிழர் கட்கும். சிறப்பாக இளைஞர்கட்கும், செந்தமிழ்த் தாய்க் கும் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். நம் சங்கமானது ஒருகால் பொருள் முட்டுப்பாடுற்று மயங்கிய காலத்துத் திரு. பிள்ளை யவர்கள் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள பல செல்வர்களையும் அணுகிப் பொருளுதவியும், திக்கற்ற மாணவர்கட்கு வேண்டிய ஏராளமான நெல்லுதவியும் பெற்றுச் சங்கக் கவலையில் பெரும் பகுதியை நீக்கினார்கள். தமிழப் பிள்ளைகள் கல்வி யறிவு பெற்று சிறந்து விளங்க வேண்டு மென்ற பெருநோக்குடன் பல வகைகளிலும் ஊக்கத்துடன் பாடுபட்டார்கள். இடைநிலை யாசிரியப் பயிற்சி பெற்று மாவட்ட உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றி வந்த இவர், நம் செந்தமிழ் மொழியிடத்து வைத்துள்ள பேரன்பின் விளைவாக சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டமும் பெற்று விளங்கினார்கள். நண்பர்களிடத்து உள்ளன்பு பூண்டு அவர்கட்குக் குறை நேர்ந்துழி மனம் பொறுது உடுக்கை யிழந்தவன் கை போலத் தம் ஆற்றலுக்கு மேலும் கூட ஆதாரங் காட்டி வந்தார்கள்.

இத்தகைய பெருங்குணம் படைத்த பேரன்பர் திரு. நடேச பிள்ளை யவர்கள் தம் உடனுைத்த அன்பர்களை விட்டுப் பிரிந்தது தமிழர்கட்கும், அன்பர்கட்கும், சங்கத்திற்கும் ஈடுசெய்ய ஒண்ணாத பேரிழப்பாகும். அவர்களது குடும்பத்தார்க்கு எம் ஆறுதலுரை தெரிவித்துக் கொள்கின்றோம்.